Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15    ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 160
தேசிய தினசரி

யாழ்ப்பாணம்    ஆடி 5    ஐமா. அவ் 16    செவ்வாய்க்கிழமை    [21-7-70]

ஈழநாடு சந்தா

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# தமிழ் சிங்கள எழுத்துக்களுக்கு 'தார்' பூசுவதால் பயனில்லை

## அரசியல்வாதிகளின் முகத்தில்தான் பூசவேண்டும்

### உதவி அமைச்சர் கூறுகிறார்

(நமது அலுவலக நிருபர் 'யோகி')

யாழ்ப்பாணம் செவ்வாய்

சிங்கள தமிழ் எழுத்துக்களுக்கு தார் பூசுவதால் பயனில்லை. சிங்களவர்களையும், தமிழர்களையும் பிரித்து இன வேற்றுமையை ஏற்படுத்த முயலும் அரசியல்வாதிகளின் முகத்தில்தான் தார்பூச வேண்டும்.

மிருசுவிலில் நேற்றுக்காலை நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில்கலாச்சார உதவி அமைச்சர் திரு சோமவீர சந்திரசிறி மேற்கண்டவாறு கூறினார்.

கொடிகாமம் மிருசுவில் சுதந்திரக் கட்சிக் கிளைகளின் சார்பில் அளிக்கப்பட்ட இந்த வரவேற்பிற்கு திரு டி. பொன்னுக்கோன் தலைமை தாங்கினார், பாடசாலை மாணவ மாணவிகள் வீதி இரு கரையிலும் நின்று அமைச்சரை வரவேற்றனர்.

உதவி அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது: யாழ்ப்பாணத்தில் பலஇடங்களில் சிங்கள எழுத்துக்களுக்கு தார் பூசப்பட்டிருப்பதை பார்த்தேன். இதே போல • தென் பகுதியில் தமிழ் எழுத்துக்களுக்குதார் பூசும் வேலை ஆரம்பித்தால் இவற்றிற்கு முடிவேஇராது இப்படியான செயல்களால் நாட்டுக்கோ மக்களுக்கோ எவ்வித பயனுமில்லை

வடபகுதியில் அபிவிருத்தி வேலைகளில் கவனம் செலுத்துவதற்காகவே நமது பிரதமர் எங்களை இப்பகுதிக்கு அடிக்கடி அனுப்பி வருகின்றார் கடந்த ஒருமாதகாலத்திற்கிடையில் சுதந்திரக்கட்சிக்கு வடபகுதியில் ஆதரவு பெருகியுள்ளதை நேரில் காணக்கூடியதாக இருந்தது. இந் நாட்டில் வாழும் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் என்றும் சகோதரர்களாகவே வாழவேண்டும் என்று பிரதமர் விரும்புகிறார்.

# 'புதிய அரசமைப்பை ஏற்க, மறுக்க சந்தர்ப்பம் தருவீர்களா?'

## 'ஐக்கிய முன்னணிக்கு அதிகாரம் உண்டு'

— நல்லூர் எம். பி.

கொழும்பு, திங்கள்

புதிய அரசியல்அமைப்பை ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏற்படுத்த அதிகாரம் இல்லையென்று கூறமுடியாது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அரசியல் அமைப்பை மாற்றிஅமைப்பதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் வழங்கவில்லையென்று கோப்பாய் எம் பி திரு கதிரவேலுப்பிள்ளை இன்று இங்கு பேசுகையில் கூறினார்.

தமிழ் மக்கள் மத்தியில் இதை முன்னரே தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் எடுத்துக் கூறுறது எமதுபிழை தற்போது ஐக்கிய முன்னணி அரசியல்நிர்ணயசபை சம்பந்தமாக இப்பொழுது நடைமுறையிலிருக்கும் அரசியல்அமைப் பின்கீழ் புதிய அரசியல்திட்டத்தை உருவாக்கவழியிருக்கும்போது, புரட்சிகரமான வழியில் அரசாங்கம் ஏன் செல்கிறதென்று தெரியவில்லை

அரசியல்திட்ட அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா புரட்சிப் பாரம்பரியத்தில் வந்தவராதலால், இந்தச் சட்டப்புரட்சியையும் உருவாக்க எண்ணினார் போலும். தமிழரசுக்கட்சியினராகியநாம் எமது லட்சியம் நிறைவேற, ஆட்சிமன்ற நடவடிக்கை, சட்ட நடவடிக்கை தோல்வியடைந்த போதிலும் ஆட்சிமன்றத்

## 'அரசியல் நிர்ணயசபை' விவாதத்தில் கோப்பாய்ப்பிரதிநிதி

கொழும்பு, திங்கள்

"புதிய அரசியல் அமைப்பை இந்நாட்டு மக்கள் ஏற்கவோ, நிராகரிக்கவோ சந்தர்ப்பம் கொடுப்பீர்களா?" என்று கோப்பாய்ப் பிரதிநிதி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை இன்று காலை ஆட்சிமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற அரசியல் நிர்ணய சபையின் இரண்டாம் நாள் கூட்டத்தில் ஆட்சிமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாகக்கோரிப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா கொண்டுவந்த பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் கேட்டார்.

இன்றைய அரசியல் அமைப்பை முற்ருக ஒழித்து புதிய சோஸலிஸக் குடியரசு மலர்வதற்கான முயற்சிகளை அர

...றும் கூறினார்.

'இப்போதைய அரசியல் அமைப்பு பிரிட்டிஷாரால் உருவாக்கப்பட்டதென்று சொல்லப்படுகிறது. இந்த அரசியலமைப்பை இலங்கை மந்திரிசபைஏற்றுக்கொண்டதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இப்போதைய அரசியலமைப்பை முற்ருக நீக்கிவிட்டு, இந்த அரசியல் அமைப்புக்கு எந்த விததொடர்புமில்லாமல் மக்களால்தெரிவுசெய்யப்பட்ட மக்களின் கட்டளையைப் பெற்ற பிரதிநிதிகள் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவார்களென்று கூறுகிறீர்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார்கள்? இப்

என்று திரு. கதிரவேலுப்பிள்ளை கூறினார்.

சட்டப் பிரச்னைக்கு வழிவகுக்காமலும் நீதிமன்றத்துக்குச் செல்லாமலும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்குச் சரியான வழியை வகுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இதற்குத் தாங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கத் தயார் என்றும் அவர் மேலும் கூறினார்.

## சிங்களத்திலும் தமிழிலும் சட்டக்கல்வி நடைபெறும்

கோட்டை, திங்கள்

தொடங்கவிருக்கும் கல்லூரி ஆண்டு தொடக்கம் சட்டக்கல்லூரியில் சட்டக்கல்வி சிங்களத்திலும் தமிழிலும் நடாத்தப்படும். ஆங்கிலத்தில் நடத்தப்படமாட்டாதெனத் தெரியவருகிறது

இம்முடிவு சட்டக்கவுன்சிலில் எடுக்கப்பட்டட. சட்டக் கல்வியை சிங்களத்தில் மட்டும் நடத்தவேண்டும் என்ற தீர்மானம் இக்கவுன்சிலில் தோற்கடிக்கப்பட்டது

## முதலாளித்துவ நாட்டில் கலைஞர்களுக்கு இடமில்லை

### கொழும்பு தொழில் நுட்பக்கல்லூரி தமிழ் விழாவில் தபால் அமைச்சர்

## பிரதமர் 25 ரூபா சேலையையே அணிகிறார்

நமதுபிரதமர் ஆடம்பரத்தை விரும்பாதவர். கறுவாக்காட்டு பெண்களைப் போல கண்களுக்கு மையும், உதட்டிற்கு சாயமும் பூச விரும்பாதவர். கிராமங்களில் நெசவு செய்யப்படும் 25ரூபா பெறுமதியானசேலைகளையே அவர் அணிந்து வருகிறார்.

கடந்த தேர்தலில் வடபகுதியில் எங்கள்கட்சி அபேட்சகர் ஒருவர்கூட வெற்றி பெருதபோதிலும் தமிழர்களின் நன்மையைக்கருதி பிரதமர் தமிழர் ஒருவருக்கு மந்திரிசபையில் இடம் ...ளின் ஒத்துழைப்பும் அவசியமில்லை. வடக்கிலும் தெற்கிலும் வாழும் ஏழைவிவசாய தொழிலாள மக்களின்ஒத்துழைப்புத்தான் அரசாங்கத்திற்கு தேவை.

வடக்கிலும் தெற்கிலும் வாழும் வறிய மக்களின் வாழ்க்கையை முன்னேற்ற மக்கள் அரசாங்கம் பாடுபடும் உங்கள் மத்தியிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம், காணிப்பிரச்னை ஆகியவற்றை அரசாங்கம் தீர்க்குமென வாக்குறுதியளிக்கின்றேன்.

முன்னாள் பிரதமர் பிரபுக்கள் போல் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகையில் கூறினார்,

தமிழ் மக்கள் மத்தியில் இதை முன்னரே தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் எடுத்துக் கூறுவது எமதுபிழை தற்போது ஐக்கிய முன்னணி அரசியல்நிர்ணயசபை சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கைக்கு சட்டப்பிரச்னை எடுப்பது அர்த்தமல்ல.'

இவ்வாறு ஆட்சிமன்றத்தில் பேசிய நல்லூர் ஆட்சிமன்றஉறுப்பினர் திரு சி. அருளம்பலம் கூறினார்.

திரு அருளம்பலம்மேலும் பேசியதாவது:

சிறுபான்மை மக்களின் உரிமைகளை அரசியல் திட்ட சொற்களால் வார்த்தைகளால் பாதுகாக்க முடியாது-பெரும்பான்மை மக்களின் ஒத்துழைப்பு மூலமே எமது உரிமைகளைப் பெறமுடியும், பெரும்பான்மையினரிடம் ஏற்படும் நல்லெண்ணம் மூலமே இவற்றைப் பெறலாம். நல்லெண்ணத்தைப் பெறும் நோக்குடன் புதிய அரசியல் அமைப்பைஅமைப்பதற்கு நாம் ஒத்துழைப்புக் கொடுக்கிறோம்'இதே எண்ணம் அரசாங்க எம் பி.க்களின் உள்ளங்களிலும் தட்டி எழுப்பப்படவேண்டும்.'

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசியதாவது:

இந்தச் சட்டப்புரட்சியையும் உருவாக்க எண்ணினார் போலும். தமிழரசுக்கட்சியினராகியநாம் எமது லட்சியம் நிறைவேற, ஆட்சிமன்ற நடவடிக்கை, சட்ட நடவடிக்கை தோல்வியடைந்த போதிலும் ஆட்சிமன்றத்துக்கு அப்பாற்பட்ட, சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள என்றுமே தயங்கியதில்லை. இதனால் சட்டப் புரட்சியை ஆதரிக்க முடிவு செய்திருக்கிறோம் ஏனெனில் எமது லட்சியம் நிறைவேற இன்னுமொரு அரங்கைஇது உருவாக்கித்தருகிறது'.

பொத்துவில் எம். பி, ஜனாப் மஜீத் பேசுகையில் தமிழரசுக் கட்சி இனியாவது தனது பெயரை மாற்றிக்கொள்ள வேண்டும் இனி சமஷ்டி, தமிழரசு என்ற பேச்சு சரிவராது என்று கூறினார்.

## இன்று

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் சுவாமி சிவானந்தர் ஆராதனை வாரத்தில் 3-ம்நாள் இன்று விசேட பிரார்த்தனை நடைபெறும்.

நாயகா கொண்டுவந்த பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் கேட்டார்.

இன்றைய அரசியல் அமைப்பை முற்றாக ஒழித்து புதிய சோஸலிஸக் குடியரசு மலர்வதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த திரு. கதிரவேலுப்பிள்ளை சட்ட ரீதியான சுலபமான வழியைவிட்டு குறுக்கு வழியில் புதிய அமைப்பை எதற்காக நாடவேண்டுமென்றும் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கம் செய்கின்ற நல்ல காரியத்தை பிரச்னையில்லாமல்செய்யலாமென்று சொன்ன கோப்பாய்ப் பிரதிநிதி இப்போதைய அரசியல் அமைப்பிலுள்ள 29-வது ஷரத்து மாற்றமுடியாத அத்தியாயம் என்றும் இதை அகற்றும் முயற்சி சட்டப் பிரச்னைக்குவழிவகுக்குமென்

பெற்ற பிரதிநிதிகள் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவார்களென்று கூறுகிறீர்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார்கள்? இப்போதுள்ள அரசியலமைப்புத்திட்டத்தின்கீழ் நடைபெற்ற தேர்தலில்தான் இந்தப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டார்கள். இந்நிலையில் இப்போதைய அரசமைப்புச் சட்டத்துக்கும் புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் இந்தப் பிரதிநிதிகளுக்கும் தொடர்பில்லையென்று கூறுவதில் அர்த்தமில்லை. புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு மக்கள் அதிகாரம் கிடைத்திருப்பதாகக் கூறுகிறீர்கள் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் உங்களுக்கு அவர்கள் இந்த அதிகாரத்தை அளிக்கவில்லை''

# 'விபத்தினின்றும் காப்பாற்ற விரைவுப்படகு உதவுக'

மாவிட்டபுரம், திங்கள்

''வடபகுதியில் உள்ள கடல்தொழிலாளர்கள் ஆழ்கடலில் எதிர்பாராது அனுபவிக்கும் கஷ்டங்களை நீக்கி உடன் அவர்களைக் காப்பாற்ற விரைவாக ஓடக்கூடிய 'சீவரட்சகப் படகு' ஒன்றை வழங்குக'' என மயிலிட்டி, தாளையடிப் பகுதி மீனவர்கள் அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர்.

அண்மையில் மயிலிட்டியில் உள்ள வே. செல்வராசா என்பவர் யந்திரப் படகு ஒன்றில் ஆழ்கடலுக்குச் சென்று வலையை விரித்து மீன்பிடித்த சமயம் 5000 ரூபா பெறுமதியான வலைகள் காணாமல்போனது. உடன் அங்கே வலைகளைத் தேடிச் சென்ற இவர் 2 நாட்களாகக் கரைசேரவில்லை. உடன் இவரைத் தேடிப் பிடிக்கவேகமாக ஓடக்கூடிய படகு இல்லாததால் 3 நாட்களுக்குப் பின்தான் இவரை ஆழ்கடலில் கண்டுபிடித்தனர்.

இதைப்போல் எத்தனையோ பேர் உடன் காப்பாற்றப்படாமல் இறந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது'' என கடல் தொழிலாளர்கள் தமது கோரிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# கலைஞர்களுக்கு இடமில்லை

## கொழும்பு தொழில் நுட்பக்கல்லூரி தமிழ் விழாவில் தபால் அமைச்சர்

வெள்ளவத்தை, திங்கள்

''நான் இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் ஒரு பழைய மாணவன். இன்று தொழில்நுட்ப மாணவர் தமிழ் விழாவில் பேசும் வாய்ப்புக் கிட்டியது பற்றி மிக்க மகிழ்கிறேன்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் என்றால் இஸ்லாமியரும் தமிழரும் ஒன்றுதான் பிரித்துப் பேசுதல் எமக்குள் இருக்கக் கூடாது'' இவ்வாறு தபாற் தந்திப் போக்குவரத்து அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரித் தமிழ் மன்றத்தினர் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்திய தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் கூறினார்.

திரு. குமாரசூரியர் தொடர்ந்து பேசியதாவது:

ஒற்றுமையான சமுதாயத்திலிருந்து கலை வளரவேண்டும். தமிழ், சிங்கள இஸ்லாமிய அரபுக் கலைகள் என்று பிரித்துக் கூற முடியாது. கூறவும் கூடாது. கலை அனைவருக்கும் பொதுவானது.

'பிக்காஸோவின் ஓவியம் உலகம் பூராவும் உள்ள மக்களால் போற்றப்படுகின்றது. கலைக்கு மொழி, ஜாதி, மதம் கிடையாது.

மாறுபாடு இல்லாமல் வளர்ச்சி அடைய முடியாது. வளர்ச்சியை ஏற்றால் மாறுபாட்டையும் ஏற்கத்தான்வேண்டும். பழமையிலே புதுமை காணவேண்டும். சோஷலிசம் ஒவ்வொருவர் வாயிலும் ஒவ்வொரு கருத்தாக மிளிர்கின்றது. 'சோஷலிசம்' என்று சொல்லும்போது மக்களே அரசாங்கம் ஆகிறார்கள். ஒவ்வொருவரும் தத்தம் சமுதாயத்திலிருந்து தமது கடமைகளைச் செய்து கொள்வதுதான் சோஷலிசம். முதலாளித்துவ நாட்டில் கலைஞர்களுக்கு இடமில்லை, வெளிநாட்டிலிருந்துதான் கலைஞர்களை இறக்குமதி செய்வார்கள்.

சீனாவில் சிறுபான்மையோருக்கு எழுத்து ரீதியான மொழியே கிடையாது. அந்த மொழிபேசும் மக்களும் வாழத்தான் செய்கிறார்கள். இந்த அரசாங்கம் மொழிக்கு ஏதும் செய்துவிடுமோ என்ற பயம் உங்களுக்கு வரக்கூடாது. முதலில் கலைஞனுடைய பசி, பட்டினி தீரவேண்டும். பிறகு கலைகள் தாமாகவே வளரும்.

நமது நாட்டில் 60—65 சத வீதம் மக்கள் 20—25 வயதுகளுக்குட்பட்டவர்கள் இவர்களது பிரச்னைகள் தான் இப்பொழுது முக்கியமானவை. இவர்களுக்கு வேலை வழங்கவேண்டும். இவற்றை அடிப்படையாக வைத்துத்தான் அரசியல் நிர்ணயசபை அமையும்

கிறார்,

கடந்த தேர்தலில் வடபகுதியில் எங்கள்கட்சி அபேட்சகர் ஒருவர்கூட வெற்றி பெறாதபோதிலும் தமிழர்களின் நன்மையைக்கருதி பிரதமர் தமிழர் ஒருவருக்கு மந்திரிசபையில் இடம் கொடுத்திருக்கிறார் தமிழர்-சிங்களவர் ஒத்துழைப்பில் தான் இந்த நாட்டின் முன்னேற்றம் தங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வாழும் பெரும் செல்வந்தர்களின் ஒத்துழைப்பும் கறுவாக்காட்டில் வாழும் செல்வந்தர்க

படும் உங்கள் மத்தியிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம், காணிப்பிரச்னை ஆகியவற்றை அரசாங்கம் தீர்க்குமென வாக்குறுதியளிக்கின்றேன்.

முன்னாள் பிரதமர் பிரபுக்கள் போல், ஆடம்பரமாக வாழ்ந்துவந்தார். நமது தலைவி திருமதி பண்டாரநாயகா ஏழைமககள்போல் வாழ்ந்துவருகிறார். அதனால் தான் அவரை இந்நாட்டுமக்கள் தங்கள் தலைவியாக ஏற்றுக்கொண்டார்கள்'

மந்திரியுடன் யாழ் மாவட்ட சுதந்திரக்கட்சிஅமைப்பாளர் திரு. எம். நடராசாவும் மந்திருந்தார். மந்திரிக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள்செய்யப்பட்டிருந்தது மந்திரி சென்ற பாதைகளில் ஆயுதம் தாங்கிய பொலிசார் காணப்பட்டனர்.

# புதிய அரசியல் திட்டம் அமைக்க மக்கள் அதிகாரம் வழங்கவில்லை

## — ஜே. ஆர்

கோட்டை, திங்கள்

பலஆண்டுகளாக அரசாங்கத்திலும், எதிர்தரப்பிலும் இருந்து வந்த எமது கட்சி இலங்கை ஒரு குடியரசாக வேண்டும் என்பதை ஆதரித்து வலியுறுத்திவந்தது. ஆனால் ஆட்சிமன்றப்பெரும்பான்மைப் பலம் கிடைக்காததினால் குடியரசாக்குவதற்குத் தேவையான சட்டத்தையியற்ற முடியவில்லை தற்போது இந்த அரசாங்கத்திற்கு இப்பொழுதுள்ள அரசியல் திட்டத்தைத் தள்ளுபடி செய்ய, திருத்தியமைக்க சட்டமியற்றுவதற்குத் தக்க அளவு பலத்தைப் பெற்றிருக்கிறது. சட்ட அமைப்பு அதிகாரிகளும் எனது கட்சியினர்களிற் சிலரும் தற்போதைய அரசியல் திட்டத்தின் சில சரத்துகளை மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசாங்கம் பெற்றிருந்தாலும்மாற்றமுடியாது. சட்ட ரீதியாக இது இயலாதகாரியம் எனக்கருத்துத் தெரிவித்துள்ளனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றும்கூட இலங்கைச்சட்டசபை தானாகப் புதியதொரு அரசியல் திட்டத்தையுருவாக்கி இதுகாலவரையிருந்துவந்த அரசியல் திட்டத்தை மாற்றியமைக்கவியலாவிட்டால் நாம் எவ்வாறு ஒரு குடியரசை திறுவ முடியும்?

நேற்று முன்தினம் ஆட்சிமன்றக் கட்டிடத்தில் நடைபெற்ற அரசியல் நிர்ணயசபையின் கூட்டத்தில் அரசியல் அமைப்பை மாற்றும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளுபவர்கள் இத்தடையை அரசியல் நிர்ணய சபை மூலம் தீர்த்துக் கொள்ளலாம். ஏனெனில் இச்சை நடைமுறையிலுள்ள அதிகரத்தைப் பெற்றதல்ல அது மக்களது அதிகாரத்தைப் பெற்றது.

மதிப்புக்குரிய பிரதமரும் நானும் இவ்விழாவில் ஒத்துழைப்பது பொருத்தமானதாகும் ஏனெனில் 155 வருடங்களுக்கு முன்னர் எனது மூதாதையரும், பிரதமரது கணவரான திரு. பண்டாரநாயக்காவின் மூதாதையரும் பிரதமரது மூதாதையரும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைத்த சரித்திர சம்பவங்கள் முற்றாக நீக்கப்படுகிறது.

எமது அரசியல் திட்டம் திருத்தப்பட்டு அல்லது தள்ளுபடி செய்யப்பட்டு பழைய அரசியல் திட்டத்தின் அடிப்படையிலமையாத புதிய அரசியல் திட்டம் உருவாக்கப்படவேண்டும் என்ற கருத்துடையவர்களில் நானும் ஒருவன். பிரான்ஸ், ரஷ்யா அமெரிக்கா போன்றபல நாடுகளில் அரசியல் நிர்ணயசபை புரட்சிகள் உள்நாட்டு சண்டைகள் ஆகியவற்றிற்குப் பின்னர் அமைக்கப்பட்டது. இன்று இலங்கையில் இச்சபை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள அரசியல் திட்டத்தை மாற்றியமைக்க 50 வீதத்துக்கும் குறைவான மக்களது அதிகாரம்மட்டும் போதுமானதல்ல ஆட்சிமன்ற அங்கத்தவர்களுக்கு மக்களால் வழங்கப்பட்ட அதிகாரம் நடைமுறையிலுள்ள சட்டசபைக்குள் பணியாற்றவேயாகும். ஏனெனில் தேர்தல் அச்சட்டசபைக்கான தேர்தலேயாகும். எனவே தற்போதைய அடிப்படைச் சட்டத்தின்கீழ் பெறப்படாத அந்த அதிகாரத்தை நீங்கள் பயன்படுத்தக்கூடாது. ஒரு சபையிலுள்ள வெற்றி பெற்றவர்களும், மற்றவர்களும் ஒன்றுசேர்ந்து 'சட்டப் புரட்சியின்' மூலமே புதிய அடிப்படைச் சட்டத்தையுருவாக்க வேண்டும். நாம் இவ்வாறு ஒன்று சேர்ந்து உருவாகும் இச்சட்டத்தை உருவாக்க முடியாது என்று கூற ஒரு சட்டமுமில்லை. நாம் ஒன்று சேர்ந்து உருவாக்கும் இச்சட்டத்தை மகள் ஏற்றுக் கொண்டு விட்டார்களானால் அதற்கால சந்ததியின் நம்பிக்கை விருப்பு நோக்கங்கள் ஆகியவற்றின் பிரதிபலிப்பாகவமையும்.

# இன்று வாக்கெடுப்பு தமிழ் எம்.பி.க்களுக்கு பதில்

கொழும்பு, திங்கள்

**இலங்கையை சுதந்திர சோஷலிஸ ஜனநாயகக் குடியரசாக்குவதற்கான அரசியல் நிர்ணய சபையை நிறுவும் பிரேரணைமீதான வாக்கெடுப்பு இன்று ஆட்சிமன்றத்தில் நடைபெறவிருக்கிறது. இதுமீதான விவாதம் நேற்றுடன் முடிவடைந்தது**

புதிய அரசியல் அமைப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றிய தங்களது கருத்துக்களை தமிழரசு தமிழ்க்காங்கிரஸ் ஆட்சிமன்ற உறுப்பினர்கள்எடுத்துவிளக்கினர். இவர்களுக்கானபதில் இன்று கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சட்ட விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா இதற்கான பதில்களைக் கொடுப்பார்.

## பௌத்தத்தை அரசாங்க மதமாக்குக

—தென்னக்கூன்

கொழும்பு திங்கள்

இந்த நாட்டின் அரசாங்க, மொழி சிங்களமாக இருப்பதுபோல பௌத்தத்தையும் அரசாங்க மதமாகப் பிரகடனப் படுத்தவேண்டும்என்று இன்று ஆட்சி மன்றத்தில் பேசிய நிக்கவரட்டிய எம்,பி திரு முதியான்சே தென்னக்கூன் கேட்டுக்கொண்டார்.

இந் நாட்டின் 71 சத வீதத்தினரின் மதமான பௌத்த மதத்தை அரசாங்க மதமாக ஆக்குவதினால் சிறுபான்மையினத்தவர்களின் மதத்துக்கு தீங்கு ஏற்பட்டுவிடும் என்று அச்சப்படத் தேவையில்லை யென்றும் அவர் சொன்னார்,

## ஆஸ்பத்திரிகளில் உதவிப்படை

கொழும்பு, திங்கள்

ஆபத்தான நோயாளிகளை வீடுகளிலிருந்து உடனடியாக ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்து சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வைத்திய உதவிப்படை ஒன்றை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பொதுமக்களிடமிருந்து அழைப்புபெறப்பட்டதும் உதவிப் படையைச் சேர்ந்தவர்கள் நோயாளியின் வீட்டுக்கு விரைந்து சென்று நோயாளிகளை ஆஸ்பத்திரிகளுக்கு கொண்டு வருவர்.

## "கள்ளிறக்கும் தொழிலாளரை கஷ்டப்படுத்தாதீர்" — என். எம்.

கொழும்பு, திங்கள்

தனிப்பட்டமுறையில் கள்ளிறக்கும் தொழிலாளர் மீது முன்னர் எடுத்ததுபோன்று கடும் நடவடிக்கையெடுக்க வேண்டாமென்றும் அவர்களை மனிதாபிமானத்துடன் கவனித்து கஷ்டப்படுத்த வேண்டாமென்றும் நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா கலால் இலாகா உத்தியோகர்களை நேற்றுச் சந்தித்தபோது கேட்டுக்கொண்டார்.

நல்லதரமான சாராயத்தை உற்பத்தி செய்யுமாறும் டாக்டர் பெரேரா அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வகுப்புகள்

பார்மசிஸ்ற் பரீட்சைக்கு (External Pharmacist Examination Course) வகுப்புகள். சங்கரப்பிள்ளை கட்டடம், 2-வது மாடி. விபரங்களுக்கு: பரணி பார்மஸி, யாழ்ப்பாணம். 3003.

### கல்வி

அரசாங்கப்பாடத் திட்டத்துக்கு அமைய சிங்களப் பாஷை கற்பதற்கு W. M. கருணாரத்தின, (நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக) 1, நாச்சிமார் கோயில் வீதி, கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2171

### நன்றி நவிலல்

9-7-70 வியாழக்கிழமை திரு. சிவநாதன்—செல்வி கமலாசனி அவர்களுக்கு நடைபெற்ற திருமண வைபவத்தில் அன்புடன் கலந்துகொண்டு ஆசி கூறியவர்களுக்கும் அன்பளிப்பு செய்தவர்களுக்கும் மற்றும் உறவினர் நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தனித்தனியே நன்றிகூற இயலாததையிட்டு வருந்துகின்றோம். கஸ்தூரியார் வளவு முத்துக்குமாரு வைத்திய சாலையின் ஆயுள்வேத வைத்தியர் க. பரராசசிங்கமும், பாரியாரும், 93/21, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம். 3199

### விற்பனைக்கு

காணி:

சாவகச்சேரி ஐந்து பரப்பு கட்டிட பிரிவிடுதல் உறுதிக் காணி பொலிஸ் ஸ்ரேஷன் ஒழுங்கை, தபால் நிலையம், சந்தை, புகையிரதநிலையம், கல்லூரி, ஆஸ்பத்திரி முதலியவற்றிற்குச் சமீபம். கூடுதல் விலை கவனத்திற்கு எடுக்கப்படும். கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். திரு. வி. நடேசன் ஆசிரியர், நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி. 3196

### கைது

வல்வெட்டித்துறை, திங்.

திருட்டு சம்பந்தமாக பருத்தித்துறைப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த முல்லைத்தீவைச் சேர்ந்த நபர் ஒருவர் பருத்தித்துறையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். வேலுப்பிள்ளை பாலசிங்கம் என்ற இந்நபர் பருத்தித்துறையிலுள்ள பழனி சரவணை என்பவரது வீட்டில் 225 ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடினராம்.

### சிரமதான மூலம் கட்டினர்

சங்கானை, திங்கள்

சுதுமலை ஈஞ்சிலடி வயிரவர் ஆலய முன்மண்டபம் அவ்வூர் இளைஞர்களால் சிரமதான மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**வெஸ்லிசினிமா**
வாணிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
AVM ராஜன்-ஜெயலலிதா
நடித்த
**மேஜர் சந்திரகாந்**

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
போயா, பிரிபோயா 2-30
எம் ஜி ஆர்.-கே.ஆர். விஜயா
நடித்த
**தாழம்பூ**

**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ் ஜெயந்தி
நடித்த
**இரு கோடுகள்**

2வது வாரம்!
**ராஜா - யாழ்ப்பாணம்**
தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்
காந்தராவ், ராஜ்ஸ்ரீ, ஜெயந்தி
நடித்த
**மாவீரன் ஜெயசீலன்**

### அறிவித்தல்



சுருட்டுத் தொழிற்சாலை உரிமையாளர் ஆறுப்பிள்ளை கந்தையா அருளம்பலம் 15-7-70ல் காலமாகிவிட்டார். அவரினால் குரும்பசிட்டி ஈஸ்வரி வாசத்தில் 14-4-1969ல் ஆரம்பிக்கப்பட்ட தொழில் தொடர்பாக உள்ள கொடுக்கல் வாங்கல் விபரங்களை கீழ்க்காணும் முகவரிக்கு 1-8-1970க்கு முன்னர் ஆதாரத்துடன் அறிவிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

அ. குகதாசன்,
அ. சிவதாசன்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை,
18-7-70. 2375

# பாரிஸ் தமிழ் ஆராய்ச்சி மகாநாடும் இலங்கைப் பிரதிநிதிகள் தெரிவும்

## இலங்கைக் கிளை தரும் விளக்கம்

பாரிஸில் நடைபெற்ற உலகத்தமிழாராய்ச்சி மகாநாடுபற்றியும் அதில் இலங்கையின் பிரதிநிதித்துவம் பற்றியும் நாட்டில் நிலவிய சந்தேகங்களையும் பல்வேறு அபிப்பிராயங்களையும் ஒட்டி உலகத்தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளை சார்பில் அதன் செயலாளரான திரு. கே. ஸி. தங்கராஜா பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை கீழே தரப்படுகிறது.

பாரிஸ்நகரிலே நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டைப் பற்றியும், அம்மகாநாட்டில் இலங்கையில் பிரதிநிதித்துவத்தைக் குறித்தும் பத்திரிகைகளில் வெளியாகியுள்ள பல்வேறு அறிக்கைகள் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. மேற்குறித்த மகாநாட்டில், இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாததுபற்றி ஒரு தப்பபிப்பிராயம் இருக்கிறது. இலங்கை கல்வியமைச்சு வெளியிட்ட அறிக்கை இதை ஓரளவு தெளிவுபடுத்தியுள்ளது. அந்த அறிக்கையை வெளியிட்டமைக்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளையில் நிலைமையைப்பற்றி யான் அறிந்த முழுவிபரங்களையும் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி முதல் மகாநாடும்-கருத்தரங்கும் மலேஷியாவில் 1966ம் வருடத்தில் நடைபெற்றது. இரண்டாவது மகாநாடு 1968ல் சென்னையில் நடைபெற்றது.

மகாநாட்டிலே கலந்து கொள்ளுமாறு அரசாங்கத்திற்கோ அன்றி அமைச்சர்களுக்கோ மகாநாட்டு அதிகாரிகள் அழைப்பு அனுப்பும் வழக்கமில்லை. கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் மகாநாட்டிற்கு இலங்கையிலிருந்து ஓர் அமைச்சரும் செல்லவில்லை. பல தமிழ் பேசும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் தங்கள் சொந்த முறையில் அங்கு சென்றிருந்தனர். சென்னையிலே இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடந்த அதே சமயத்தில் தமிழக அரசு தமிழ் விழா ஒன்றினைத் தனியாக நடத்தி

லுள்ள மொழி ஆராய்ச்சியாளர்களுக்கு தமிழின் சிறப்புகளையும், முன்னேற்றத்தையும் தெரிந்து கொள்ளுமாறு உதவவே நடைபெற்றது. சங்கஇலக்கியம், நவீன இலக்கியங்கள், சிற்பசாஸ்திரம், தமிழர்களின் வெளிநாட்டு உறவுகள். கடல்கடந்த தமிழர் தமிழ் வடமொழி முதலிய ஆராய்ச்சிக் கட்டுரைகளின் மீது விவாதங்கள் சிறப்பாக நடைபெற்றன.

இம் மகாநாட்டில் நடவடிக்கைகள் பிரெஞ்சிலும், ஆங்கிலத்திலும் நடைபெற்றன. 39 நாடுகளிலிருந்து 200 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டுள்ளனர். 60 பல்கலைக்கழகங்களிலிருந்தும் உயர் கல்விதாபனங்களிலிருந்தும் கல்வியாளர்கள் இதில்பங்குபற்றினர். யுனெஸ்கோ என்ற ஐக்கிய நாட்டு கல்வி. கலாச்சார ஸ்தாபனத்தின் டிபுடி டைரக்டர் ஜெனரல் டாக்டர் என். ஆதிசேஷய்ய அவர்கள் இம்மகாநாட்டை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கு மகாநாட்டின் அமைப்பாளர்கள் இலங்கையில் மூவருக்கான பயணச் சீட்டுகளை அனுப்பிவைத்தனர். பேராதனை, கொழும்பு இவ்விடங்களிலுள்ள, இலங்கைபல்கலைகழகத் தமிழ் பகுதியைச் சேர்ந்த கலாநிதி வித்தியானந்தன், கலாநிதி கைலாசபதி இவர்களை அதில் கலந்து கொள்ளும்படி மகாநாட்டு அமைப்பாளர்கள் அழைத்திருந்தார்கள், இந்த மன்றத்தில் இலங்கைக் கிளைப் பிரதிநிதியாக வரும்படி மூன்றாவது அழைப்பு எனக்கு அனுப்பியிருந்தார்கள் மகாநாட்டு அமைப்பாளரின் சம்மதத்தின் மீது எனக்குப் பதிலாக கொழும்பு நூல் நிலையத்தைச் [illegible] சேர்ந்த [illegible] ஜனாப். கமாலுதீனை செல்லுமாறு கேட்டுக்கொண்டேன்.

இம் மூவரைத் தவிர எவருக்கும் மகநாடு அமைப்பாளர் பயணச் சீட்டுக்களை வழங்கவில்லை

நான்காவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை இலங்கையில் நடத்துவதென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு இலங்கை அரசாங்கத்தின் பூரண ஆதரவும்கிடைக்குமென்றே நம்புகிறோம். அம் மகாநாட்டுக்கு வேறுநாடுகளிலிருந்து அமைச்சர்கள் யாரையும் அழைக்கவேண்டுமா என்பது போன்ற விஷயம் பற்றி தக்க சமயத்தில் இலங்கை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு சிறப்புற நடைபெறவேண்டுமென்று, உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் சார்பாக மகாநாட்டின் நிர்வாகக் குழுத் தலைவருக்கு ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளோம். அது வருமாறு:

''மூன்றாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு சிறப்புற நடைபெற வேண்டுமென்று, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை அம்மன்றத்துக்குத் தன் வாழ்த்துக்களை அனுப்புகின்றது. இலங்கை வாழ் மக்களின் தேசிய மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றாகும். தமிழ்க் கல்வி, தமிழாராய்ச்சி ஆகிய துறைகளில் இலங்கை அறிஞர்கள் பலர் பெருந்தொண்டாற்றியுள்ளனர். பாரிஸில் நடைபெறும் மகாநாடு, தமிழாராய்ச்சி மேலும் வளர்வதற்கு வழிவகுக்குமென உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை நம்புகின்றது.

மேற்கு நாடொன்றில் தமிழியலைப் பொருளாகக் கொண்ட மகாநாடு ஒன்று முதன்முறையாக நடைபெறுகின்றது. பல நூற்றாண்டுகளாக தமிழ்க் கல்வியின் பல துறைகளி

(3-ம் கலம் பார்க்க)

(8-ம் கலத் தொடர்ச்சி)

லும் சிறந்த வகையில் தொண்டாற்றி வந்துள்ள நாடொன்றில் இம்மகாநாடு நடைபெறுதல் ஏற்புடைத்தேயாகும்.

உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை இம்மகாநாடு சிறப்புற நடைபெறவேண்டுமென விழைவதோடு, நான்காம் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை இலங்கையில் நடாத்த வேண்டுமெனவும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினரை அழைக்கின்றது.

நான்காம் மகாநாடு இலங்கையில் நடைபெறின், இலங்கை அறிஞர்கள் தமிழ் இயலுக்கு ஆற்றியுள்ள தொண்டு எத்தகையது என்பதை மதிப்பிடுவதற்கும் இலங்கையில் ஆராய்ச்சிக் கிளை தொடங்குவதற்கான புதிய துறைகள் யாவை யென ஆராய்வதற்கும் தருணம் உண்டாகும்.

நான்காம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு இலங்கையில் நடைபெற வேண்டுமென விழையும் எங்கள் வேண்டுகோளை உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஏற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கின்றோம்.''

ஐக்கிய நாட்டுக் கல்வி

**முக்கிய வேண்டுகோள்**

30 வருட ஆண்டு விழாவும் புத்தக வெளியீடும் 17-6-70-ல் நிறைவேறியபடியால் விளம்பர நிதியாவும் செலவாகிவிட்டது. தயவுசெய்து விளம்பரம் கேட்டு சிரமம் தரவேண்டாமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**சன்லைட் றைக்கிளீனர்ஸ்,**
பஸ் நிலையப்பக்கம் — யாழ்ப்பாணம்.
தந்தி: றைக்கிளீன். தொலைபேசி: 474



**சமசந்தர்ப்பம்!**

பணக்காரர்கள் மேலும் பணத்தில் மிதக்கிறார்கள்.

ஏழைகளோ பிள்ளைகளைப் பெற்றுத் தவிக்கிறார்கள்!

படித்தோரும், பணம் படைத்தோரும் அளவான குடும்பங்களை அமைக்கும் போது, ஏழைத் தாய்மார்கள் மட்டும் அடுத்தடுத்து பிள்ளைகளைப் பெற்று அழிவதேன்!

எவ்வப்போது பிள்ளைகளை பெறுவது எனத் தீர்மானிக்கும் உரிமை சகலருக்கும் உண்டு!

விபரங்களுக்கு:

இலங்கை குடும்பத் திட்டச் சங்கம்
தலைமைக் காரியாலயம்,
23/5, லோர்டன்பிளேஸ்
கொழும்பு-7.

தவல் பரவு:
457, காலி வீதி,
கொழும்பு 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தராவ், ராஜ்ஶ்ரீ, ஜெயந்தி
நடித்த
# மாவீரன் ஜெயசீலன்

## வின்ஸர் — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி கணேசன் (இருவேடங்களில்
பத்மினி - ராகினி - தங்கவேலு
நடித்த
# உத்தமபுத்திரன்
(புதிய கொப்பி)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை
## வெலிங்டன் யாழ்ப்பாணம்
திரைகளில்
தினசரி பிற்பகல் 3-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'
# துணைவன்
கதை வசனம் பாலமுருகன் | சங்கீதம் K.V.மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


இலங்கையில் நடைபெற வேண்டுமென விழையும் எங்கள் வேண்டுகோளை உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஏற்றுக்கொள்ளு மென எதிர்பார்க்கின்றோம்.''

ஐக்கிய நாட்டுக் கல்வி கலாச்சார ஸ்தாபனத்தின் (யுனெஸ்கோ) ஆதரவுடன் சென்னையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையத்தை ஆரம்பிப்பது பற்றி பாரிஸ் மகாநாட்டில் முதல்நாள் அன்று தனியாக ஆலோசனை நடைபெற்றது. அந்த ஆலோசனைக் குழுவின் தலைவருக்கு, இலங்கைக் கிளை ஸ்தாபனம் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

''தமிழ்த் துறையில் உலகெங்கணும் நடைபெறும் கல்வியையும், ஆராய்ச்சியையும் இணைக்கும் சாதனமாக இந்நிலையம் விளங்கவேண்டும் என்றும், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் காணப்படும் பல்வேறு மொழிகளும் தமிழ்மொழியினுல் எத்தகைய மாற்றங்களுக்குள்ளாயின என்பதை ஆராய்வதற்கு வழிகாட்டும் நிறுவனமாக இது திகழவேண்டும் என்றும் விரும்புகிறது.

இம்மொழிகளின் பயனையும் தரத்தையும் உணர்ந்தறிவதற்கு ஒருங்கு சேர்ந்து முயற்சி செய்ய இந்நிலையம் ஊக்கமளிக்குமெனவும் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களிடையே ஒற்றுமையையும், நல்லெண்ணத்தையும் இந்நிலையம் வளர்க்குமென எதிர்பார்க்கிறோம்.

இப்பெரு முயற்சிக்குத் தன் உறுதியான ஆதரவை அளிக்குமென இலங்கைக் கிளை கூறுவதோடு இந்நிலையம் கூடியவிரைவில் உருவாகுமெனவும் நம்புகிறது.''


MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya-Prepoya 10-30 a.m.
Terry Moore,
Ben Johnson
in
MIGHTY JOE YOUNG
(Color)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M.
Poya, Pre-poya 10.30 a.m.
Jim Brown
Lee Maruin
in
THE DIRTY DOZEN


த்துவர் தங்கள் சொந்த முறையில் அங்கு சென்றிருந்தனர். சென்னையிலே இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடந்த அதே சமயத்தில் தமிழக அரசு 'தமிழ் விழா' ஒன்றினைத் தனியாக நடத்தியது. அந்த விழாவில் கலந்து கொள்ளுமாறுதான், தமிழகஅரசு திரு. திருச்செல்வத்திற்கு விசேஷ அழைப்புஅனுப்பியிருந்தது. மகாநாட்டு அதிகாரிகள் யாரும் அவருக்கு அமைச்சர் என்ற முறையில் பிரத்தியேக அழைப்பு அனுப்பவில்லை. மந்திரிகளோ அல்லது அரசாங்கப் பிரதிநிதிகளோ இம்மகாநாட்டில் உத்தியோக முறையில் கலந்து கொள்ளும்படி அழைக்க, மகாநாட்டு அதிகாரிகளுக்கு அரசாங்க ஒழுங்கு முறை இடம் தருமா என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. இதுவரை எந்தமகாநாட்டுக்கும், எந்தக் கருத்தரங்குக்கும் எந்தநாட்டு அமைச்சருக்கும் உத்தியோக பூர்வமான முறையில் மகாநாட்டு அதிகாரிகளால் அழைப்பு அனுப்பப்படவில்லை என்பதைத் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் கருத்தரங்குக்கு தமிழக முதல் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் என்பதும், மலேஷியா அரசாங்க அமைச்சர் திரு சம்பந்தர் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது மகாநாட்டில் கலந்து கொண்டதும் அவர்களது தனிப்பட்ட முறையிலேயே அன்றி அரசாங்கத்தின் பிரதிநிதிகள் என்ற முறையிலல்ல. இம் மகாநாட்டுக்கு உலகிலே எந்த அரசாங்கத்தினதும் உத்தியோக பூர்வமான பிரதிநிதிகள் மகாநாட்டு அதிகாரிகளால் அழைக்கப்படவில்லை. தமிழக முதல் அமைச்சர் சொந்தக் காரணங்களுக்காக ஐரோப்பா சென்ற இச்சந்தர்ப்பத்தில் பாரிஸில் இம் மகாநாட்டில் முதல் நாள் மட்டும் பேசிவிட்டு கண் சிகிச்சைக்காக லண்டனுக்குத் திரும்பியது குறிப்பிடத்தக்கது.

சென்னையிலே உலகத் தமிழ் ஆராய்ச்சிமன்றத்தை ஆரம்பிக்க தமிழக அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. அவ்விஷயம் பற்றிக் கலந்து பேச அமைச்சர் மதியழகன் தமிழக அரசாங்கத்தின் சார்பாக இதில் கலந்து கொள்ளத் தீர்மானித்தார்.

### பாரிஸ் மகாநாடு

அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு மேலை நாடுகளி




# மேனி எழில் என்றென்றும் பேணிக் காக்கப்பட்டது

சகுந்தலை தன் மேனி வனப்பினைப் பெருக்கிப் பொலியச் செய்வதற்குச் சந்தனக் குழம்பும் குங்குமக் கலவையும் உபயோகித்து வந்தாள். ஆனல், உங்கள் மேனி வனப்பினைச் சீருறுத்தி மெருகூட்டத் தூய கலமைனும் வடித்த உவிச்ஹசெல் சத்தும் கொண்ட குறுாக்ஸ் லக்ரோ-கலமைன் வைத்தியக் கலை வழங்கியுள்ள அதிசய அழகு சாதனப் பொருள். குறுாக்ஸ் லக்ரோ-கலமைன் லோசனும் பவுடரும் சருமத்திலுள்ள மாசு மறுக்களை யெல்லாம் அகற்றி மேனி எழிலைப் பாதுகாக்க உதவுகின்றது. வேர்க்குரு, வெகிர், சருமத் தடிப்பு, முகப்பரு, சொறி, அழற்சி, வறட்டுச் சருமம் ஆகியவற்றையெல்லாம் குளுமை காட்டி மாற்றிவிடுகின்றது.




குறுாக்ஸ் லக்ரோ-கலமைன் கொண்டு உங்கள் சருமத்திற்கு
20-ம் நூற்றுண்டு ஒப்பனை நலம் வழங்குங்கள்.

விநியோகஸ்தர்கள்: ஜே.எல். மொறிசன், சன் அண்டு ஜோன்ஸ் (சிலோன்) லிமிற்றெட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்ருல் விளைவுகள் மோசமாகும்!

## ஸாம்பியா அதிபர் பிரிட்டிஷ் பிரதமருக்கு எச்சரிக்கை

லண்டன்; ஜூலை 21

**தென்னுபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் விற்பனை செய்யக்கூடா தென்று சாம்பியா நாட்டு அதிபர் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. ஹீத்துக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிருர்.**

இரு கிழமைகளுக்குள் பிரிட்டிஷ் ப்ரதம மந்திரிக்கு அதிபர் கென்னத்கவுண்டா இரு கடிதங்களை எழுதியிருக்கிருர்.

பிரிட்டன் தென்னுபிரிக்காவுக்கு ஆயுதங்கள் விற்பதின் விளைவுகள் பற்றி சாம்பியா அதிபர் எச்சரிக்கை விடுத்திருக்கின்ருர்.

பிரிட்டனில் ஏற்பட்டுள்ள புதிய கொன்சர்வேடிக் கட்சி தென்னுபிரிக்காவுக்கு ஆயுதங்கள் விற்பதற்கான பழைய ஒப்பந்தத்தைக் கௌரவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவிருக்கின்றது இதனை பிரிட்டிஷ் தொழிற் கட்சி மட்டுமின்றி வேறு பலரும் எதிர்த்து வருகின்றனர். பிரிட்டன் தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பதை எதிர்த்து பிரிட்டிஷ் பிரஜைகள் ஆர்ப்பாட்டங்கள் செய்து வருகிருர்கள். தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கிறவர்களின் சார்பில் நேற்று 5 பேர்கள் கொண்ட தூது கோஷ்டியொன்று திரு. ஹீத்தைச் சந்தித்து மகஜர் ஒன்றை கொடுத்தது இந்தக் குழுவில் கிறிஸ்தவ சமயத் தலைவர்களும் இடம் பெற்றிருக்கிருர்கள்.

# வலதுசாரி கூட்டணிசவாலுக்கு அஞ்சப் போவதில்லை

## பாரதப் பிரதமர் முழக்கம்



பெங்களூர், ஜூலை 21

வலதுசாரிகள் தமக்கு எதிராக கூட்டணிகள் அமைப்பது குறித்து பயப்படப்போவதில்லையென்று இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி கூறினுர்.

பெல்ஹாரியில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய பிரதமர் திருமதி இந்திரா காந்தி வலதுசாரிக் கட்சிகள் தனக் மகிழ்ச்சி பொங்க வரவேற்ருர்கள்.

பெல்லாரியில் நடைபெற்ற பிரமாண்டமான தொரு பொதுக் கூட்டத்தில் திருமதி காந்தி உரை நிகழ்த்தினுர். பதவியை விட்டு உடனடியாகவே தாம் விலகிக் கொண்டுவிட சம்மதம் என்ருர். ஆனுல் மக்கள் என்மீது நம்பிக்கை வைத்திருக்கிருர்கள். ஒருசிலருக்கு விருப்பமில்லையென்பதற்காக நான் பதவியை விட்டு விலகத் தயாராய் இல்லை, என்று திருமதி காந்தி குறிப்பிட்டார்.

வலதுசாரி கட்சிகள் வீண் அபவாதங்களைக் கிளப்பிவிட்டு எனக்கு எதிராக கூட்டு முன்னணி அமைக்க முயல்கிருர்கள். இந்தக் கூட்டு முன்னணிகளை எதிர்க்கும் சக்தி எனக்கு இருக்கின்றது என்று திருமதி காந்தி குறிப்பிட்டார்.

— —

## கருணுநிதி இன்று திரும்புகிருர்

லண்டன், ஜூலை 20

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணுநிதி இங்கிலாந்தில் தனது ஐந்து நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நாளை இந்தியா திரும்புகிருர்.

இவர் இங்கிலாந்தில் தங்கியிருக்கும் பொழுது பல அமைச்சர்களைக் கண்டு பேசினுர் இங்கிலாந்து வெளிநாட்டமைச்சர் திரு

## பொலிஸ் தலைமை நிலயம் மீது தாக்குதல்

றெஜியோ கலாப்றியா (இத்தாலி), ஜூலை 20

ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸ் தலைமைநிலையத்தின் மீது கற்களாலும், எரிகுண்டுகளாலும் எறிந்ததில் கதவுகளும் யன்னல்களும் எரிந்ததோடு பல பொலிஸ் வாகனங்களும் தனியார் கார்களும் சேதமடைந்தன.

தென் இத்தாலித் துறைமுகத்தில் 5 நாள் நடந்த

## லண்டன் பாராட்டிய இரு இலங்கையர்

கொழும்பு, திங்கள்

லண்டன் சிவில் எஞ்ஜினியரிங்கழகத்தினரால் 1970ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட உயர் பரீட்சையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. பீ. ஜயசிங்கம், திரு. எஸ். திருஞானசம்பந்தர் ஆகிய இரு பொறியியலாளர்களும் சித்தியடைந்து சர்வதேசரீதியில் இலங்கைக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளனர்.

இவர்கள் இருவரும் மேற்படி பரீட்சைக்கு எழுதிய கட்டுரைகள் பரீட்சையாளர்களால் ''உச்சத் தகைமை' வாய்ந்தன எனப் பாராட்டப்பட்டது. மேற்படி கழகம் வெளியிடும் சஞ்சிகையில் இவர்களது கட்டுரைகளைப் பிரசுரிப்பதற்கு இரு பொறியியலாளர்களிடமும் என்ஜினியர் கழகம் அனுமதி கோரியுள்ளது.

அகில உலகரீதியில் நடாத்தப்படும் இப்பரீட்சையில் இத்தகையமதிப்பை இலங்கையர் பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

திரு. பீ. ஜயசிங்கம் புவி அணைக்கட்டு நிர்மாணம்பற்றிய சில முறைகள்'' என்னும் கட்டுரையையும் திரு. எஸ். திருஞானசம்பந்தர் ''புவி அணைக் கட்டுக்குரிய அத்திபாரங்களின் பகுப்பாராய்வு'' என்னும் கட்டுரையையும் எழுதிச் சமர்ப்பித்தனர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியம் தம்பதிகளின் புத்திரனுன எஸ், திருஞானசம்பந்தர் யாழ்ப்பாணக்கல்லூரியின் பழைய மாணவராவார். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சிவில் எஞ்ஜினியர் பட்டம்பெற்ருர்.

குடத்தனையைச் சேர்ந்த பொன்னு தம்பதிகளின் புதல்வனுன பீ. ஜயசிங்கம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராவார். பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து சிவில் எஞ்ஜினியரிங் பரீட்சையில் விசேட சித்தி பெற்றவர். (மு சி.)

அரியாலை நாகபடுவான்

## 22ம் திகதி காணி கையளிப்பு

பூநகரி, திங்கள்

பூநகரி மன்னுர் வீதியிலுள்ள அரியாலை நாகபடுவான் குடியேற்றத் திட்டத்தில் 100 பேருக்குக் காணி கொடுக்கப்பட்டுள்ளது. இக் காணிகள் பூநகரிகாரியாதிகாரி பிரிவிலிருந்து 50பேருக்கும் யாழ்ப்பாணம் பிரிவிலுள்ள 50 பேருக்கும் நெற்காணி இரண்டு ஏக்கரும் குடியிருப்புக்காணி இரண்டு ஏக்கருமாக 4 ஏக்கர் வழங்கப் பட்டுள்ளது: காணி பெற்ற 100 பேரையும் காணி ஒப்படைப்பதற்காக இம்மாதம் 22ம் தேதி மேற்படி திட்டத்திற்கு வந்து சேரும்படியும், நிரந்தரமாக இருந்து காடுவெட்டுவதற்கேற்ற வசதியுடன் வரும்படியும் யாழ்மாவட்டகாணி உத்தியோகத்தர் திரு. பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

— —

## 'பெற்ருேர் அலட்சியம் கூடாது'

பண்டத்தரிப்பு, திங்கள்

'தாம் கற்கும் பாடசாலை மீது நன்றியும் அபிமானமுமுடையோராயிருக்கும் பண்பை மாணவரிடையே வளர்க்க பெற்ருேர் உதவ வேண்டும் தம்பிள்ளைகளின் பொறுப்பை பெற்ருேர் கவனியாதிருப்பதுபிழை' என இளவாலை மகாவித்தியாலயப் பரிசளிப்பு விழாவில் வித்தியாலய அதிபர் பேசுகையில் தெரிவித்தார்.

— —

## உதவி அமைச்சர் கலந்து கொள்வார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தற்போது யாழ்பாணத்திற்கு விஜயம் செய்திருக்கும் உதவி அமைச்சர் திரு. சோ[illegible]வீரசந்திரசிறி நாளை கைதடி லங்காசுதந்திரக்

— —

## ''ஆசிரியன் இறைவனின் பிரதிநிதி''

உடுப்பிட்டி, திங்கள்

'தெய்வத்த[illegible]மை வாய்ந்த ஆசிரியத் [illegible]ழிலைக் கடந்த 39 ஆண்டு

# தமிழ் நாட்டுடன் மாணவர் பரிவர்த்தனைக்கு வலியுறுத்து

## பாரிஸ் மாநாட்டின் கருணுநிதி நிகழ்த்திய உரையில் முழுவிபரம்

பாரிஸ் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு கருணுநிதி நிகழ்த்திய ஆரம்ப உரையில் ஒரு பகுதி ஏற்கனவே வெளியாகியிருந்தது தெரிந்ததே. இன்று அந்த உரையின் முழுவிபரமும் இங்குதரப்படுகின்றது.

தமிழ்நாட்டுக்கும் இதர நாடுகளுக்குமிடையில் மாணவர் பரிவர்த்தனைகளை தீவிரப்படுத்தவேண்டும் என்று திரு. கருணுநிதி இந்த உரையில் வற்புறுத்தியுள்ளார்.

'இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் பேறு பெற்றமைக்காக மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தமிழை-தமிழ் உணர்வை என் கண்ணிலும் மேலானதாகக் கருதும் உணர்வோடு, இவ்விழா நிகழ்ச்சி குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எனது குழந்தைகள் தமிழ் பேசக்கேட்டுப் பல நாட்கள் ஆகிவிட்டன. ஆதிசேசையா தமது பேருரையில் கையாண்ட தமிழ்ச் சொற்கள். எனக்குஅதை நினைவூட்டுகின்றன. அவர் இந்த உலகத் தமிழ் மாநாட்டில் துணிவோடு தமிழிலேயே பேச முற்பட்டமைக்காக அவருக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரான்சு கலாச்சாரம் தமிழ் நாட்டிற்கு பல நூற்ருண்டு காலமாக அறிமுகமாகியிருக்கிறது. ஆனுல் இதன் செல்வாக்கு தமிழகத்தில் ஊடுருவி இருப்பதாகச் சொல்லமுடியாது தமிழ் மொழிவளர்ச்சியில் பிரான்சு மக்கள் கொண்டுள்ள ஆர்வத்தை, பிரெஞ்சு தமிழ் அகராதி வெளியீட்டின் மூலமாக உணரமுடிகின்றது.

சில நாட்களுக்கு முன்பு வார்சேல்ஸ் சென்றபோது. பிரான்சு-தமிழ் உறவுகளைக் காட்டும் கலைச்சின்னங்களைக் காணவிரும்பினேன். டூப்ளே இந்தியாவுக்குக் கொண்டு செல்லவிரும்பிய ஒரு கடியாரத்தை எனக்கு காட்டினுர்கள். ஆனுல் மாறிவிட்ட சூழ்நிலை காரணமாக டூப்ளே அதைக்கொண்டு செல்ல இயலவில்லை என்பதையும் தெரிவித்தார்கள். காலம் மாறிவிட்டது. கடிகாரம் வார்சேல்சிலேயே இருக்கிறது.

எந்த தேசியப் பிரச்னைக்கும் குறைந்ததல்ல என்ற முறையில் அவர்கள் மொழிப்பிரச்னையை அணுகுகிருர்கள்

தமிழ் பல்லாண்டு கால வரலாற்றைப் பெற்ற மொழி. தமிழ் வளம் நிறைந்த மொழி. பாரதி போன்ற கவிஞர்கள், தமிழன் புகழைப் பாடியிருக்கிருர்கள்.

ஆனுல் காலத்தால் மூத்தது என்ற நிலையும் தற்போதைய வளர்ச்சியும் மட்டும் போதாது, பண்டைப்பெருமையில் மட்டும் நாம் திருப்தியடைந்துவிடக்கூடாது

### விண்வெளிக்காலம்

விஞ்ஞான வளர்ச்சியும். விண்வெளிப்பயணம் உள்ள இக்காலத்திற்கு ஏற்றவாறு கருத்துக்களையும் பொருளையும் வெளிப்படுத்தும் வகையில், தமிழ், வளர்ச்சி பெறவேண்டும் உயர்தரத் தொழில் நுட்பக்கலைகள், விஞ்ஞானம், மருத்துவ இயல் ஆகியவைகளைத் தமிழில் போதிக்கத்தக்க அளவில், வளர்ச்சி ஏற்படவேண்டும்.

இப்படிப்பட்ட வளர்ச்சியைக் காண்பதற்காகத் தமிழ் நாட்டிற்கும் மற்ற நாடுகளுக்குமிடையே மாணவர்களைப் பரிவர்த்தனை செய்துகொள்வது அவசியம் இத்தகைய தொடர்பின் மூலம், மொழி வளர்ச்சிக்கு வழிகாண வேண்டும்.

### அகராதி

நவீன ஆங்கிலம்-தமிழ் அகராதி ஒன்று உருவாக்கப்படவேண்டும். பயனுள்ள முறையில் இத்தொகுப்பு அமைய, குறைந்தபட்சம் 6 லட்சம் சொற்கள் இருக்குமாறு செய்யவேண்டும்.

சங்ககாலத்திலிருந்து நாம் பெற்றுள்ளவை 3 லட்சம் சொற்கள்தான் 3 லட்சம் சொற்கள், 6 லட்சமாகப் பெருகினுல்தான், தமிழ் உண்மையான நவீன மொழி ஆக முடியும்.

தமிழகத்திலிருந்துவந்துள்ள பிரதிநிதிகள் குழுவினர், மருத்துவமனைக்குத் தமது குழந்தையைக்கொண்டுவந்துள்ள ஓர் அன்புமிக்கத் தாயைப் போன்றவர்கள்.

'இம்மாநாட்டில் திரண்டுள்ள தமிழாராய்ச்சி வல்

## பால் சங்க அங்கத்தவரின் அவல நிலை

சுழிபுரம், திங்கள்

வலிகாமம் மேற்கு ஐக்கிய கூட்டுறவு பாற்பண்ணை சங்கத் தலைமைக்கந்தோர் அலுவலகம் சுழிபுரம் அந்திய காலப் பண உதவிச் சங்க கட்டிட ஓர் அறையில் 1957-ம் ஆண்டு தொடக்கம் இயங்கிவந்துகடந்த இரண்டு ஆண்டுகளாகப் பூட்டப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் ஒரு கிளைச் சங்கம் சுதுமலையில் தொடர்ந்து இயங்கிவருகின்றது. ஆனுல் தாய்ச்சங்கம் பூட்டப்பட்டு, சங்கத்துக்கு சொந்தமான பொருள்கள் யாவும் சேதமடையும் நிலையில் உள்ளது. சங்கத்தை தொடர்ந்து நடத்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்ட இச்சங்க அங்கத்தவர்களுக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லையாம். அங்கத்தவர்கள் சிலர் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான நல்ல இனமாடுகளை வளர்த்து தொடர்ந்து பால் கொடுக்க முடியாமல் அவதிப்படுகின்றனர். எப்படியும்சங்கத்தை திறந்து நடாத்த நடவடிக்கை எடுக்குமாறு அங்கத்தவர் பலர் ஒரு மகஜர் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கோரியுள்ளனர்.

— —

## அரிசி ஏற்றுமதிக்கு தடை

கோட்டை, திங்கள்

உள்நாட்டுக்குள் அரிசியை இடத்துக்கிடம் ஏற்றுமதி செய்யக்கூடாது என உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி இலங்கரத்தினு தடைவிதித்துள்ளார். உணவுக்கட்டுப்பாட்டதிகாரி உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி ஆகியோரிடம் உத்தரவுபெற்றவர்களே அரிசியை ஏற்றுமதி செய்யலாம். அரசாங்கத்தின் சார்பிலோ அல்லது பங்கீட்டரிசிக்கு விநியோகிக்கப்படுவதற்கோ கொண்டு செல்பவர்களுக்கு மேற்படி தடையில்லை எனவும் தெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி இந்திரா காந்தி கூறினார்.

பெல்ஹாரியில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய பிரதமர் திருமதி இந்திரா காந்தி வலதுசாரிக் கட்சிகள் தனக்கெதிராகக் கூட்டு முன்னணி அமைக்க முயற்சிகள் எடுப்பது பற்றி குறிப்பிட்டார்.

மக்கள் என்மீது நம்பிக்கை வைத்திருக்கும் வரையில் எந்தக் கூட்டுக்கள் பற்றியும் எனக்கு பயமில்லையென்றார் திருமதி காந்தி.

பிரதமர் இந்திரா காந்தி மைசூருக்கு வந்து சேர்ந்ததும் அவரை முதலமைச்சர் திரு வீரேந்திர பாட்டீலும் கவர்னரும் வரவேற்றனர். பிரதமர் பல ஊர்கள் வழியாக விசேஷ ரயிலில் பிரயாணம் செய்தார். வழிகள் தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் அவரை

...நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நாளை இந்தியா திரும்புகிறார்.

இவர் இங்கிலாந்தில் தங்கியிருக்கும் பொழுது பல அமைச்சர்களைக் கண்டு பேசினார். இங்கிலாந்து வெளிநாட்டமைச்சர் திரு ஜோசெப் ஹாட்பெர், முன்பு இந்தியாவில் கவர்னர்ஜெனரலாக இருந்த லோட் இர்வின் மகனை வெளிநாட்டு உதவி நிதி அமைச்சர் ரிச்சேர்ட்வுட் ஆகியோருடன் இங்கிலாந்து தமிழ்நாட்டுக்குச் செய்யக்கூடிய உதவி பற்றிப் பேசினார். தூத்துக்குடி உரத் தொழிற்சாலைக்கு வேண்டிய உதவி பற்றியும் பேசினார்.

இவரது கண்ணைப் பரிசோதித்த டாக்டர்கள் பெட்போர்ட், எல்டா ஆகியோர் ஆபரேஷன் தேவையில்லை எனக் கூறினர்.

...குண்டுகளாலும் எறிந்ததில் கதவுகளும் யன்னல்களும் எரிந்ததோடு பல பொலிஸ் வாகனங்களும் தனியார் கார்களும் சேதமடைந்தன.

தென் இத்தாலித் துறைமுகத்தில் 5 நாள் நடந்த குழப்பத்தில் கொல்லப்பட்ட 46 வயதுடைய புகையிரதப் பகுதியைச் சேர்ந்த புறானே லபத்தேலின் இறுதிச்சடங்கின்பின் இந்நிகழ்ச்சி நடந்தது.

குழப்பக்காரர்கள் மீது பொலிசார் கண்ணீர்புகைப் பிரயோகம் செய்து குழப்பக்காரர்களைக் கலைத்தனர். பல எரிகுண்டுகள் பொலிஸ் தலைமை நிலையத்துள் விழுந்து சில தளபாடங்களை நாசமாக்கின. ஆனாலும் நெருப்பு விரைவில் அணைக்கப்பட்டது.

...கொள்வார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தற்போது யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருக்கும் உதவி அமைச்சர் திரு. சே... வீரசந்திரசிறி நாளை கைதடி லங்காசுதந்திரக் கட்சிக் கிளையினரால் நடத்தப்படும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வார். தொடர்ந்து உதவி அமைச்சர் சாவகச்சேரி சென்று அங்குள்ள சுதந்திரக் கட்சிக் கிளை உத்தியோகஸ்தர்களுடன் ஆலோசனைகள் நடத்துவார்.

## சிரமதானம்

சுழிபுரம், திங்கள்

பண்ணாகம் வாலிபர்கள் சிரமதான முறையில் ஒழுங்கை ஒன்றுக்குக் கல் பரவி செப்பனிட்டனர். வழக்கம்பரையில் இருந்து பண்டத்தரிப்பு வரை செல்லும் வீதியிலுள்ள விசவத்தனை நோக்கிச் செல்லும் இரண்டாவது ஒழுங்கையை சுழிபுரம் கிராமசபையினரால் கொடுக்கப்பட்ட மூலப்பொருள்களைக் கொண்டு வாலிபர்கள் ஒழுங்கைக்கு வேண்டிய இடங்களில் கற்களை பரவி செப்பனிட்டு ஒழுங்கையை நல்ல முறையில் திருத்தியமைத்துள்ளனர்.

— —

## தற்கொலை

வல்வெட்டித்துறை, திங்கள்

துன்னாலை தெற்கைச் சேர்ந்த மு. கணபதிப்பிள்ளை என்னும் 60 வயது வயோதிபர் மனக்கவலை காரணமாக தனது வீட்டில் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் சாட்சிகளை விசாரணை செய்த பின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## ...பிரதிநிதி”

உடுப்பிட்டி, திங்கள்

“தெய்வத்தன்மை வாய்ந்த ஆசிரியத் தொழிலைக் கடந்த 39 ஆண்டுகளாக என் சக்திக்கு இயன்றவரை சிறந்த முறையில் ஆற்றியதையிட்டுப் பெருமையடைகின்றேன். எமது பாடசாலையில் கல்வி பயின்ற பலர் டாக்டர்களாகவும், சட்ட அரசியல் வாதிகளாகவும் திகழுகின்றனர். ஆசிரியன் இறைவனின் பிரதிநிதி என்பதை உணர வேண்டும். ஆசிரியர் ஒருவர் தான் இறக்கும்வரை மாணவ உலகுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும்”

மேற்கண்டவாறு கரவெட்டி கிழக்கு மாணிக்கவாசகர் வித்தியாசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றி ஒய்வு பெறும் திரு வ. சின்னையா மேற்படி வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தால் தனக்களிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மாணவர்கள் சார்பில் செல்வன் சோ. இரஞ்சகுமாரன் தலைமையாசிரியரின் சேவையைப் பாராட்டிப் பேசினார். மதிய போசன விருந்தும் அளிக்கப்பட்டது.

... ...

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

...ருகலை மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமை ஆற்றிவரும் சுன்னாகம் மயிலணி வாசியான பிரம்மஸ்ரீ சா. சோமாஸ்கந்தக் குருக்கள் இம்மாதம் 15ம் திகதி தொடக்கம் மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலைக்கு இட மாற்றம் பெற்று வந்துள்ளார்.

...அதைக்கொண்டு செல்ல இயலவில்லை என்பதையும் தெரிவித்தார்கள். காலம் மாறிவிட்டது. கடிகாரம் வார்சேல்சிலேயே இருக்கிறது.

### பாரிநகர்

சில நாட்களுக்கு முன்பு நான் பாரிஸ் வந்தபோது இந்திய மாணவர்கள் விருந்துக்கு அழைத்தார்கள். ஒரு மாணவர், பாரிஸ் நகரைப் பண்டைத் தமிழ் வள்ளல் பாரியை நினைவு கூறும் முறையில் பாரிநகர் என்று குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகள் குழுவினர் 18 பேர்கள் ஆவர். தமிழக மக்கள் 4 கோடிப் பேருக்குப் பிரதிநிதித்துவம் வகிக்க இந்த அளவில் இருப்பதுபொருத்தமானது இம்மாநாட்டில் இந்த முறையில் நாங்கள் கலந்துகொள்வது பொருத்தமும் கடமையும் ஆகும்.

தமிழ் பல்வேறு நாடுகளிலும் பரவியுள்ளது. தமிழர்கள் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்கிறார்கள். ஆனால் மோரீஸ்தீவு போன்ற இடங்களில் தமிழ் அருகி வருகின்றது. இன்றும் சில நாடுகளில் தமிழர்கள் தங்கள் தாய் மொழியையே மறக்கும்படியான அபாயம் இருக்கிறது.

இத்தகைய நிலை நீடிக்கும்படி விடக்கூடாது. தமிழ் கற்கவும் தமிழுடன் தொடர்பு கொள்ளவும் தமிழர் வாழும் எல்லா நாடுகளிலும் வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்.

### மொழிப்பிரச்னை

மொழிப் பிரச்னையில் கவனம் செலுத்துவதால் பாவமும் இல்லை, தீமையுமில்லை:

சுவிட்சர்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளில் தாய் மொழிப்பிரச்னைக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

...னர், மருத்துவமனைக்குத் தமது குழந்தையைக்கொண்டுவந்துள்ள ஓர் அன்புமிக்கத் தாயைப் போன்றவர்கள்.

‘இம்மாநாட்டில் திரண்டுள்ள தமிழாராய்ச்சி வல்லுநர்கள், மருத்துவ அறுவை சிகிச்சைத் துறையில் நல்ல அனுபவம் பெற்ற நிலைமையிலுள்ளவர்கள். குழந்தையைப் பூரணமாகக் குணப்படுத்தி, நல்ல ஆரோக்கியம் காண இவர்கள் முயல்கிறார்கள் குழந்தையின் நலம் கருதும் தாய், சின்னக்குழந்தைக்கு இவ்வளவு பெரிய அறுவைச் சிகிச்சைக்குத் தடைபோடக்கூடாது. அப்படித் தடைபோடுவது தாயன்புக்கு ஏற்றதாகாது அதே நேரத்தில் கையில் கருவி ஏந்தியுள்ள மருத்துவர்களும், சிகிச்சையில் விழிப்புடன் செயல்படுவது முக்கியம். ஆராய்ச்சியாளர்கள், தங்கள் ஆராய்ச்சி தான் அனைத்தும் என்று கருதிவிடக்கூடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இம்மகாநாடு, 3 முக்கிய பணிகளில் கருத்தைச் செலுத்தவேண்டும். முதலாவது, தமிழ் நாட்டுக்கும், மற்ற நாடுகளுக்குமிடையே மாணவர் பரிவர்த்தனைக்கு ஏற்பாடு செய்வது. இரண்டாவது; விண்வெளியுகத்திற்கு ஏற்ப தமிழ்வளர்ச்சி பெறும்படியாக, நவீன ஆங்கிலம்-தமிழ் அகராதி தொகுக்கும் பணியை மேற்கொள்ளல். மூன்றாவது, உலகின் பல்வேறு நாடுகளில் தமிழ் மொழியைப் பரப்ப வழிவகை காணல்.

இப்பெரும் பணியில் காலம் சென்ற பேரறிஞர் அண்ணாவின் வழியைப் பின்பற்றும் தமிழக அரசு, தன்னால் இயன்ற எல்லா உதவியும் செய்யும் என்று இம்மாநாட்டில் கூறுகிறேன்’.

...வர்களே அரிசியை ஏற்றுமதி செய்யலாம். அரசாங்கத்தின் சாரிபிலோ அல்லது பங்கீட்டரிசிக்கு விநியோகிக்கப்படுவதற்கோ கொண்டு செல்பவர்களுக்கு மேற்படி தடையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

— —

## ஒருநாள் சம்பளம் வழங்கினர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கோப்பாய் நாவலர் பாடசாலை ஆசிரியர்கள் நாட்டைப் பாதுகாக்கும் நிதிக்குத் தமது ஒருநாள் சம்பளத்தை வளங்கினர்.

— —

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 21—7—70

(காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீ அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 குரல்வகை, 7-30 திரைகானம், 7-45 சித்திரம், 8-00 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு6-15வாத்தியஇசை, 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.




குளிர்மையான, மென்தோல் பில்டர் முனை சிகரெட்டுக்கள், தற்கால நவீன புகையின்பத்திற்கு பசுமையுடன் உங்களை அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டஹோன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்



எல்லா அளவுகளிலும் **எஸ்-லோன்** பைப்புகள், கூரைப்பீலிகளும் அதற்குரிய உபகரணங்களும் எங்களிடம் கிடைக்கும். வடமாகாணத்தில் அதிக விற்பனையாகும் பைப் இது ஒன்றே.

★ விவசாயிகளுக்கும் வீட்டுப் பாவனையாளருக்கும் தேவையான அளவுகளில் மின்சாரத்தில் இயங்கக்கூடிய தண்ணீர்ப்பம்புகள் எம்மிடம் உடனடியாகக் கிடைக்கும்.

★ மின்சார பல்புகள் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

★ முக்கிய குறிப்பு: வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன் வழங்குவதுடன் உங்கள் இடங்களுக்கு இலவசமாகவும் விநியோகம் செய்யப்படும்.

# நியூரோன் எலெக்றிக்கல்ஸ்,

ஸ்ரான்லி ரோட், போன்: 7016 யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஒரு நோக்கமுமில்லாமல் வெறுமனே இலக்கியத்தைப் படிப்பதைவிட, நல்ல விவேகத்தோடு கைத்தொழில் பயிற்சி பெறுவது அறிவை விசாலப்படுத்த எவ்வளவோ உதவியாயிருக்கும்.

— மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம்
5-ந் திகதி (21-7-70)

## நம்பிக்கை

பாரம்பரியம் மிக்க நமது நாட்டின் வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பமாகியிருக்கிறது. இந்த அத்தியாயம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியது. இலங்கையை புதிய சோஷலிஸக் குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி செயல்படுத்துவதற்காக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அரசியல் அமைப்பை உருவாக்கும் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களாகவும் பணியாற்றத்தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளதைத்தான் குறிப்பிடுகிறோம்.

ரஷ்யாவில், அமெரிக்காவில். இந்தியாவில், அயர்லாந்தில், கானாவில், தென்ரொடீஷியாவில் புதிய அரசியல் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டபொழுது ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறையைக் கடைப்பிடித்தன அவற்றிற்கு வெவ்வேறு பின்னணிகளுமிருந்தன.

அரசியல் நிர்ணய சபை பற்றி இரு தினங்களுக்கு முன்னர் இதே பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். நாம் எடுத்துக்காட்டியிருந்தது போல் சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையின் முதற்கூட்ட வைபவத்திற்குச் சென்று கலந்துகொண்டது மகிழ்ச்சியளிப்பதாகும். நவ அரங்க மண்டபத்தில் நடைபெற்ற அரசியல் நிர்ணய சபையின் முதற்கூட்ட நிகழ்ச்சிகள் இந்நாட்டின் தேசிய மொழிகளான சிங்களத்திலும் தமிழிலும் நடைபெற்றதும் தமிழ்மொழிக்கு உரிய அந்தஸ்து அளிக்கப்பட்டதும் இந்நாட்டின் எதிர்காலம் சிறந்து விளங்குமென்பதற்கு நல்ல அறிகுறியாகும்.

'எமது அரசியலமைப்பு நாட்டின் ஒருமைப்பாட்டை உறுதியாக்கும் தன்மையுடையதாக இருக்கவேண்டும். சிங்களவர், தமிழர், சோனகர் பறங்கியர், மலாயர் ஆகிய வேறுபட்ட இனத்தவராக நாம் இருந்தபோதிலும் அனைவரும் ஒரே நாட்டினரே' என்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா அரசியல் நிர்ணய சபையை உருவாக்கும் பிரேரணையை முன்மொழிந்து பேசுகையில் கூறியிருப்பதும் முன்னர் எதையும் வகுப்புவாதக் கண் கொண்டு பார்த்தவர்கள் கூட இப்பொழுது நாட்டின் ஒற்றுமையைப்பற்றியும் முன்னேற்றம் பற்றியும் கருத்துத்தெரிவித்துவருதும் நமது நாடு உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கும் காலம் இப்பொழுதுதான் உருவாகிக்கொண்டிருக்கிறதென்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

புதிய அரசியலமைப்பு இந்நாட்டில் வாழும் சகல மக்களினதும் அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பதாகவும், ஜனநாயக உரிமைகளைப் பேணுவதாகவும், சரியான சோஷலிஸ அமைப்பை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கவேண்டும். சிறுபான்மையினரின்உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று பிரதமர் முதல் முக்கிய அமைச்சர்கள் வரை உறுதியளித்துள்ளனர் இதில் அவநம்பிக்கை கொள்ளவேண்டிய அவசியமுமில்லை.

ஆனாலும் அரசியல் சட்ட ரீதியாக உறுதியளிக்கப்பட்டாலும் நிர்வாக ரீதியிலும் இது செயற்படுத்தப்படவேண்டும். கடந்த கால அனுபவம் இது.

சட்டத்தையும் சட்டமூலங்களையும் நம்பியிருப்பதைவிட ஒற்றுமையும் ஒத்துழைப்பும் தான் நல்ல பயன் தருமென்று இரு தினங்களுக்கு முன் நாம் இதே பத்தியில் சுட்டிக்காட்டியதை, மீண்டும் குறிப்பாக நமது பிரதிநிதிகளுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

டாக்டர் நைல்ஸ்)

அரசியல் நிர்ணயசபை ஆரம்பம்

# மீண்டும் தமிழுக்கு உரிய அந்தஸ்து கிடைக்கிறது

## தமிழ் அமைச்சருக்கு எஸ். ஜே. வி. கைகுலுக்கிப்பாராட்டு

(நமது அரசியல் நிருபர்)

ஈழத்திலே புதிய ஆட்சியின் கீழ் தமிழர் மானத்துடன் அமைதியாக வாழ முடியுமா? புதிய அரசியல் நிர்ணய சபை நடவடிக்கைகள் எல்லாம் சிங்களத்தில் மட்டும் தான் நடக்குமா? அல்லது தமிழுக்கும் இடமிருக்குமா என்ற இரு முக்கிய கேள்விகளுக்கான பதிலை அறிவதற்காகசென்ற ஞாயிறன்று "நவரங்க ஹலா' (புது அரங்க மண்டபம்) சென்றேன், என் அந்தக் கவலையை ஓரளவு நீக்குவதற்கான சில நல்ல அறிகுறிகளைக்கண்டதுடன் எதிர்காலத்தைப்பற்றிபுதிய நம்பிக்கையுடன் திரும்பக்கூடியதாக இருந்தது.

கொழும்பிலேயே பெரிய மண்டபமாம் அது. 1600 பேருக்குமேல் இருக்கக்கூடியது, ஏரிக்கரை ஸ்தாபனத்தாரின் முயற்சியில் இது கட்டப்பட்டதாம்! பெரிய மேடை. தேசீயக்கொடி (பச்சை, ஆரஞ்சு கோடுகளுடன்) மத்தியில் இருந்து அலங்கரித்தது. இருபுறமும் பெரிய யானைத் தந்தங்கள். சிங்களமன்னருக்குரிய ஆலவட்டங்கள், மேடைமீது சற்றே உயரமான இடத்தில் ஒரு மேசை. விசேஷ நாற்காலி அதற்குக்கீழ் மற்றொரு மேசையும் நாற்காலியும். முதல் மேசை தலைவருக்கு; மற்றது காரியதரிசிக்கு. இருபுறங்களிலும் பிரதமர், மந்திரிகள் உள்ளிட்டு எம். பி. மார்கள் அமர்ந்திருந்தார்கள். மண்டபத்தில் சைவமங்கையர் கழகத்தலைவர் திருமதி நமசிவாயம் உள்ளிட்டு பல தமிழ் பெண்மணிகளும் வீற்றிருந்தனர்.

தமிழரசுக்கட்சியினர் இதில் கலந்துகொள்வார்களா? அல்லது இக்கூட்டத்தை பகிஷ்கரிப்பார்களா? என்று பலருக்கும் சந்தேகம். அவர்கள் எக்காரணம் பற்றியும் வராமல் இருந்திருந்தால், அது பெரிய அபசகுனமாக இருந்திருக்கும். மன்னர் பிரதிநிதி முதலில் வந்தார்: பின்னர் தமிழரசுக்கட்சித் தலைவர் உள்ளிட்டு பல எம். பி. மார்களும் வந்து அமர்ந்ததும், அரசாங்கக்கட்சியினருக்கும் அது பெரிய ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் கடிதங்களைப் படிக்கும்படி அரசியல் அமைப்பு அமைச்சரான டாக்டர் கொல்வினை சிங்களத்தில் பணித்தார். தெய்வத்திலும், நல்லநேரத்திலும் நம்பிக்கையுள்ள பிரதமர் ஸ்ரீமா, தமிழருக்கு அநீதியைச் செய்யமாட்டாரென நம்பலாமென்று கூட்டம் முடிந்தபின் ஒரு தமிழன்பர் என்னிடம் சொன்னார்.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பாக, அன்றைய நிகழ்ச்சிகளைப்பற்றிய அச்சடித்த சில பிரசுரங்களை விநியோகித்தனர். அதில் அரசியல் நிர்ணய சபை கூட்டுவது பற்றி ஸ்ரீமா அனுப்பிய கடிதம். நகல் தீர்மானம் இவற்றின் விபரங்கள் அடங்கியிருந்தன. முதல் பக்கத்திலே சிங்களத்திலும், இரண்டாம் பக்கத்தில் தமிழிலும், மூன்றும் பக்கத்தில் ஆங்கிலத்திலுமாக மூன்று மொழிகளிலும் அச்சடித்திருந்தார்கள். கடைசிப்பக்கத்தில் மூன்று மொழிகளிலும் கூட்ட நிகழ்ச்சிநிரல் இருந்தது. இம்மூன்று மொழிகளையும் அங்கீகரித்து பாவிப்பதாயின் நாட்டின் மொழிப் பிரச்னை நல்லபடியாகத்தீருமென்று, ஒரு சிங்கள தீவிரவாத எம். பி. முதல் முறையாக ஒரு கூட்டத்தில் கூறியதாக செய்தியொன்றைப் பார்த்தேன். இதேமுறையை அரசாங்கம் எல்லாத்துறைகளிலும் தொடர்ந்து கைக்கொள்வதாயின், மொழிப் பிரச்னை தீருவதுடன், நாட்டில் மக்களிடையே ஒற்றுமை பலப்பட்டு நல்ல சூழ்நிலை ஏற்படுமல்லவா?

0 0 0

அன்று அதிகாலை வருணன் வந்து ஊரெல்லாம் சுத்தமாக்கினன். பின்னர் கதிரவன் பூரண கிரணங்களுடனே [illegible] லிந்தான் [illegible]ரும், கூட்டம் ஆரம்பமாகும் சம[illegible]

யுடன் நினைவுகூர்ந்தார். அதில் பெரியார் பொன்னம்பலம் ராமநாதனின் பெயரையும் கூற மறக்கவில்லை. இதைக் கேட்டபோது ஆறுதலும் நம்பிக்கையும் அளித்தது. புதிய ஆட்சியாளருக்கு வகுப்புத் துவேஷம் இல்லை என்பதைக் காட்டியது. பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் பணியாற்றுவது தங்களுக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும்இருப்பதாக டாக்டர் என். எம். கூறியபோது சபையில் கரகோஷமெழுந்தது

அவர் பேச்சை தமிழில் மொழிபெயர்க்க நேரமில்லாமைக்காக அரசியல் அமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் வருத்தம் தெரிவித்து மொழி பெயர்ப்பைப் பின்னர் பார்லிமெண்ட் சபையில் படிக்க ஒழுங்கு செய்வதாக அறிவித்தார். இதையெல்லாம் பார்க்கும் போது தமிழ் மொழிக்கு மீண்டும் சமஅந்தஸ்து கிடைக்கக்கூடிய காலம் நெருங்கி வருகிறதென்றே எனக்குப்பட்டது.

இக்கூட்டத்துக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும்வந்து கலந்துகொண்டது பெரிய காரியம். தலைவர் எஸ். ஜே. வி., கூட்டத்தைவிட்டு வெளியே சென்ற சமயத்தில் வழியில் நின்றுகொண்டிருந்த அமைச்சர் குமாரசூரியரின் கையைக் குலுக்கி அவரைப் பாராட்டினர். தமிழ்மொழிக்கு சரித்திர முக்கியம் வாய்ந்த அக்கூட்டத்திலே அந்தஸ்து கிடைத்தமைக்காகவும், இவ்விஷயத்தில் தமது பொறுப்பை வெற்றிகரமாகச் செய்தமைககாகவுமே திரு. எஸ். ஜே. வி. அவரைக்கைகுலுக்கிப் பாராட்டி இருக்கவேண்டும். அவரிடம் இப்பாராட்டைப் பெற்றது தமிழ் அமைச்சருக்கு மிக மகிழ்ச்சியும் பெருமையும் அளித்திருப்பின் அதில் வியப்பெதுவுமில்லை. மற்றும் பலரும் கைகுலுக்கிஅவரைப்பாராட்டினர்.

திரு: பீட்டர் கெனமன் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்து சிங்களத்தில் பேசினர். அவர் பேசி முடிந்ததும், டாக்டர் என். எம், டாக்டர் கொல்வின் முதலியவர்கள் கரகோஷம் செய்து அவரைப் பாராட்டினர். ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட பீட்டர் கெனமன், சிங்களத்தில் பேசி சிங்கள மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தேசிய சரித்திரத்தில் புதியதோர் சகாப்தத்துக்கு இப்பொழுது அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இந்நாட்டிலே இரண்டாவது முக்கிய சமூகமாகவுள்ள தமிழரையும் தமிழையும் ஒதுக்காமல் அவர்களும் மானத்துடன் வாழ்ந்து தங்கள் தேசியக் கடமைகளை முன்போல் செய்யக்கூடிய வாய்ப்பு மீண்டும் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் திரும்பினேன்.

அரசியல் நிர்ணயசபை

நமது நிருபர்
பெரி சுந்தரலிங்கம்

# 'உலகமே ஒரு நாடக மேடை'

# 'நவரங்கஹலாவில்' ஆரம்பவிழா

'உலகமே ஒரு நாடக மேடை' என்றான் ஷேக்ஸ்பியர், இதனையே 'உலகமே நாடகமேடையடா இந்த உருவமெல்லாம் வேஷதாரியடா" என்று பாடினன் இன்னொரு தமிழறிஞன்.

இலங்கையின் மிகச்சிறந்த நவீன நாடக அரங்கமான கொழும்பு. 'நவரங்ககலா' வில் எழுச்சிபெற்ற இளைய சமுதாயத்தின் பிரதிநிதிகள் மங்கள சங்கொலித்து முரசறைந்து புதியதோர் அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கும் உன்னத பணியில் உறுதியுடன் [illegible]பட்ட வேளையில் இடப்[illegible]பொருத் நாயக்கா எழுந்து அரசியல் அமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வினை கூட்டுப்பிரகடனத்தை வாசிக்கச்சொல்லியதோடு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

அரசியல் நிர்ணய சபையின் தலைவராக திரு. ஸ்ரான்லி திலகரத்தினவும் செயலாளராக திரு. டபிள்யூ ஜயவர்த்தனவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், புதியதொரு அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்குவதற்காக ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசியல்நிர்ணயசபை உறுப்பினர்களாகப் பணிபுரியவும்

### ஆட்சிமன்ற மண்டபத்தில்

பிற்பகல் 3 மணிக்கு ஆட்சிமன்ற மண்டபத்தில் கூடிய போது, எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்தன, பொருள் பொதிந்ததொரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பழைய அரசியலமைப்புத் திட்டத்தின் விதிகளின் படி, புதிய அரசியலமைப்புத் திட்டமொன்றை உருவாக்க எமக்கு அதிகாரம் இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றி மேலோட்டமாக ஆராந்து விட்டு, அரசாங்கத்தைப் பல கோணங்களில் நின்று திரும்பத்திரும்ப பாராட்டித் தள்ளினர்.

கட்சி அரசியலும், அமைச்சரவை ஆட்சியும் நமது நாட்டுக்கு நன்மையைவிட, அதிகக் கேடையே விளைவித்திருக்கின்றன. எனவே, புதிய அரசியலமைப்புத் திட்டத்தின்கீழ், ஆட்சிமன்றமுறை-கட்சி அரசியல் எல்லாம் ஒழிக்கப்பட்டு, வேறு முறையிலான ஆட்சியமைப்பு ஏற்பட வேண்டுமென்று 'தகா' வெகுவாக வற்புறுத்தினர்.

சோல்பரிஅரசியல் அமைப்புத் திட்டத்தின்கீழ் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குமென்பதற்கு நல்ல அறிகுறியாகும்.

'எமது அரசியலமைப்பு நாட்டின் ஒருமைப்பாட்டை உறுதியாக்கும் தன்மையுடையதாக இருக்கவேண்டும்.மென்று இரு தினங்களுக்கு முன் நாம் இதே பத்தியில் சுட்டிக்காட்டியதை, மீண்டும் குறிப்பாக நமது பிரதிநிதிகளுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

## டாக்டர் நைல்ஸ்

டாக்டர் டி. ரி. நைல்ஸ் அவர்களின்அகாலமறைவு பொதுவாக உலகிற்கும் குறிப்பாக இலங்கைக்கும் பேரிழப்பாகும்,

டாக்டர் நைல்ஸ் அவர்கள் இளமை தொட்டே கிறிஸ்தவ இயக்கங்களில் ஈடுபட்டு அவற்றின் மறுமலர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றினார்யாழ்ப்பாணத்தில் பிரபலபோதகராகவும் கல்விமானாகவும் கவிஞராகவும் விளங்கிய அவரது பேரனான டி. பி நைல்ஸின் அடிச்சுவட்டைப் பின்பற்றி கிறிஸ்தவசமய சேவைக்கும். மனிதகுல சேவைக்கும் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் டாக்டர் டி. ரி. நைல்ஸ்.

நீதிநியாயத்துக்காக யார்தான்தன் மீது குறைகூறுவார்களென்றாலும் அவற்றிற்காக முன்வந்து குரல் எழுப்பத்தயங்காத உறுதியான உள்ளம் கொண்டவர் டாக்டர் நைல்ஸ். ஆழ்ந்த அறிவும் அஞ்சா நெஞ்சமும் கொண்ட டாக்டர் நைல்ஸ் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராகப்பணியாற்றிய காலத்தில் கிறிஸ்தவப் பிள்ளைகளினது மட்டுமல்ல சகல பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திலும் அக்கறை செலுத்தினார்

சிறந்த கல்விமானும் மதபக்தியும் சமயசமூகத் தொண்டனுமான டாக்டர் நைல்ஸ் அவர்களின் அகாலமறைவு இலங்கைக்கும் உலகிற்கும்ஈடுசெய்ய முடியாத பேரிழப்பகும்.

# கிளிநொச்சித் தொகுதியில் ஏழைகள் பாதுகாப்பு நிதி

பூநகரி, திங்கள்

கிளிநொச்சித்தொகுதியில் ஏழைகள் பாதுகாப்பு நிதி இயக்கமொன்றை கிளிநொச்சி எம் பி திரு. வீ. ஆனந்தசங்கரி ஆரம்பித்து வைத்தார். இதற்கென ஒரு நிதிக்குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது கிளிநொச்சி எம் பி தனது முதல் மாதச் சம்பளத்தை ஏழைகள் பாதுகாப்புநிதிக்காக அதற்கென தெரிவுசெய்யப்பட்ட குழுவிடம் கையளித்துள்ளார்.

இந்நிதி அங்கவீனர்களுக்கும் மற்றும் ஏழைப்பிள்ளைகளின் பாடசாலைப் புத்தகங்களுக்கும் ஏழைகளின் இறுதிச் சடங்கு வைபவங்களுக்கும் வழங்கப்படும் என்றும் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

— —

## பாதுகாப்பு நிதி

யாழ்ப்பாணம், திங்கள்

வவுனிய பாவற்குள மகாவித்தியாலய அதிபரும் ஆசிரியர்களும் தங்களது ஒரு நாள் வேதனத்தை நாட்டைக்காக்கும்நிதிக்காக வழங்கியுள்ளார்கள்.

**மயிலிட்டி கி. ச.**

## புதிய இரு உறுப்பினர்கள்

மாவிட்டபுரம், செவ்

மயிலிட்டிக் கிராம சபையின்இருவட்டாரங்களுக்கும் நடைபெற்ற இடைத் தேர்தலில் இரு வட்டாரங்களுக்கும் திரு. என். அப்பையாவும், கே. மகேஸ்வரனும் தெரியப்பட்டனர். 5-ம், 4ம் வட்டார உறுப்பினர்கள் அரசாங்க உத்தியேகம் பெற்றுச் சென்றதனல் பிரஸ்தாப வட்டாரங்களுக்கு உறுப்பினர் தெரிவு நடைபெற்றது.

தேர்தல் முடிவுகள் பின்வருமாறு 14-ம் வட்டாரம்- கே. மகேஸ்வரன் 200, எஸ். கந்தசாமி 118.

5ம் வட்டாரம்- என். அப்பையா 176, எம். சபாரத்தினம் 150, எஸ். நவரத்தினம் 110.

5-ம் வட்டாரத்தில் போட்டியிட கட்டுப்பணம் கட்டிய இருவர் கடைசி நேரத்தில் விலகியது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

முதலில் வந்தார். பின்னர் தமிழரசுக்கட்சித் தலைவர் உள்ளிட்டு பல எம். பி. மார்களும் வந்து அமர்ந்ததும், அரசாங்கக்கட்சியினருக்கும் அது பெரிய ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. தமிழ்க்காங்கிரஸ், யு. என். பி. கட்சி உள்ளிட்டு எதிர்க்கட்சியினரெல்லோரும் பிரதமரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இக்கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். மேடையிலே எம். பி க்களுக்குரிய ஒரு சில நாற்காலிகள்தான் காலியாக இருந்தன. கட்சி வேற்றுமையின்றி எம். பி.க்கள் இஷ்டமான ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

சரியாக காலை 11 மணிக்கு பிரதமர் ஸ்ரீமா சாதாரண நீல நிறப்புடவை அணிந்து, மண்டபத்துக்குள் கம்பீரம் பொலிய வந்தபோது, புத்த குருமார்களைத்தவிர மற்ற எல்லோரும் எழுந்து நின்று மரியாதை தெரிவித்தனர். முதல் வரிசையில் முன்னதாக அமர்ந்திருந்த புத்த குருமார்களுக்கு தாழ்மையுடன் வணக்கம் செலுத்திவிட்டு பிரதமர் மேடைக்கு வந்தார். தேசியகீதம் முழங்கியபின் சங்கநாதமும், கண்டிய 'மகுலபேர' ஒலிகளும் எழுந்தன. தூய வெள்ளை உடை உடுத்து 12 மங்கையர்கள் ஜெயமங்கள கீதம் பாடியபோது, சபையில் பத்திரிகையாளர் உள்ளிட்டு மீண்டும் எல்லாரும் எழுந்து நின்று மரியாதை தெரிவித்தார்கள். ஜெயமங்கள கீதங்கள் பாடப்படுகையில், பிரதமர் தமது கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, பக்கத்திலிருந்த டாக்டர் கொல்வினிடம் ஏதோசொன்னார். கீதம் முடிந்து எல்லாரும் அமர்ந்ததும் சில நிமிடங்களுக்கு ஒன்றும் நடக்கவில்லை. டாக்டர் என். எம்., கெனமன், கொல்வின் இவர்கள் சிரித்து ஏதோ பேசிக்கொண்டனர். தலைவர் இன்னும் தெரிவு செய்யப்படவில்லை. பிரதமர் உள்ளிட்டு பலரும் தங்கள் கைக்கடிகாரங்களைப்பார்த்த வண்ணமிருந்தார்கள். விஷயம் பின்புதான் புரிந்தது. காலை 11-17க்குத்தான் சுபநேரமாம். தெய்வ நம்பிக்கை மிக்க பிரதமருக்கு நேரம்காலம்இவற்றில் அதிக கவனம். நல்ல நாள் நல்ல நேரம் எல்லாம் முன்னதாகவே பார்த்தே, அரசியல் நிர்ணய சபை ஆரம்பவிழாவுக்கான திகதியை அவர் வைத்தாராம். அந்த நல்ல முகூர்த்தம் வந்ததும் 'டக்' கென்று பிரதமர் ஸ்ரீமா முன் வந்து ஒலி பெருக்கியின் வாயிலாக இக்கூட்டத்தைக் கூட்டுவதற்கான அழைப்புக்

0 0 0

அன்று அதிகாலை வருணன் வந்து ஊரெல்லாம் சுத்தமாக்கினன். பின்னர் கதிரவன் பூரண கிரணங்களுடன் ...ாலிந்தானென்றும், கூட்டம் ஆரம்பமாகும் சமயத்தில், மேகங்கள் சூழ்ந்து வந்து, வருணன் புஷ்பமாரி பொழிந்தான்: இதுவும் ஒரு நல்ல சகுனமாகப்பட்டது.

இலங்கைக்கு சுதந்தரமான ஜனநாயகக் குடியரசு அரசியலமைப்பைத் தயாரிப்பதற்காக அரசியல் நிர்ணயசபையைக் கூட்டுவதற்கான தீர்மானத்தை பிரதமர் சிங்களத்தில் பிரேபித்துப் பேசினர். அந்தப் பேச்சுக்கான தமிழ் மொழிபெயர்ப்பை தட்டச்சு செய்து முன்கூட்டியே விநியோகித்தனர். ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்திருந்தார்கள். இக்கூட்டம் கூட்டுவதற்கான கடிதங்களையும் பிரதமரின் பேச்சையும் தமிழிலே தபால் அமைச்சர் திரு. ஸி. குமாரசூரியர் படித்தார். ஆனல் ஆங்கில மொழி பெயர்ப்புகள் கூட்டத்தில் படிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சிங்களத்தைப் போல் தமிழுக்கும் இடமளிக்க வேண்டுமென்றும் தமிழரின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் பெற வேண்டுமென்றும் பிரதமர் சிறிமாவுக்கும் அரசியல் அமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வினுக்கும்பூரணமாக விருப்பம்உள்ளதென்பதை அக்கூட்டத்தில் காணக்கூடியதாக இருந்தது.

சிங்களத்தில் செய்யப்பட்ட ஒவ்வொரு பிரேரணையையும் உடனுக்குடன் தமிழிலே ஜனுப் மஜீத் முன்வந்து மொழிபெயர்த்துச் சொன்னர் நிகழ்ச்சிகளெல்லாம் சிங்களத்திலும் தமிழிலும் மட்டுமே இருந்தன: ஆங்கிலத்தில் யாரு ஒரு வார்த்தையும் பேசவில்லை. 1956-ம் வருடத்துக்கு முன் சிங்களமும் தமிழும் இந்நாட்டின் உத்தியோக மொழிகளாக இருந்தன. அந்த நிலையை மாற்றியதால்தான் நாட்டில் சமூகக் குழப்பங்கள் ஏற்பட்டு அமைதி குலைந்தது. மீண்டும் தமிழுக்குப் பழைய அந்தஸ்து அளிக்க வேண்டிய அவசியத்தைஇதற்கிடையே ஆட்சியாளர் உணர்ந்திருப்பதாயின் அதில் வியப்பில்லை.

டாக்டர் என். எம். பெரேரா, அரசியல் அமைப்புக்கூட்ட ஒழுங்கு முறைகளைப்பற்றிய பிரேரணையைக் கொண்டு வருமுன் நாட்டுக்கு அரசியல் சுதந்திரம் பெற்றுத்தந்த பெரியார்களைப்பற்றி நன்றி

சமுதாயத்தின் பிரதிநிதிகள் மங்கள சங்கொலித்து முரசறைந்து புதியதோர் அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கும் உன்னத பணியில் உறுதியுடன் ...பட்ட வேளையில் இடப்பொருத்தம் பற்றி நான் சிந்தித்த போது ஷேக்ஸ்பியரின் மேற்குறித்த புகழ்பெற்ற வரிகளே நினைவுக்கு வந்தன:

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும், டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவும் சின்னஞ்சிறு பிராயத்தினராக துள்ளித்திரியும் பருவத்திலே ஓடியாடி விளையாடிக்களித்த அதே ரோயல் கல்லூரிச் சதுக்கத்திலே கட்டியெழுப்பப்பட்டிருக்கும் 'நவரங்ககலா'வில் எதிர்க்கட்சித் தலைவராக ஜே ஆரும், அரசியலமைப்புத் திட்ட அமைச்சராக கொல்வினும் உட்கார்ந்து, அவர்கள் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து உயிர் முடிந்த இந்த நாட்டின் புதியதோர் வரலாறு படைக்கும் பணியில் ஈடுபட்டனர் என்றால், காலத்தின் கோலத்தை என்னவென்று வியந்து மகிழ்வதோ தெரியவில்லை.

அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டகடைசி ராஜதானி கோட்டைராஜதானியாகும். அன்றைய கோட்டை ராஜதானிப் பிரதேசமான இன்றைய கோட்டே ஆட்சிமன்றத் தொகுதியின் உறுப்பினரான திரு. ஸ்ரான்லிதிலகரத்தினவே, அந்நிய ஏகாதிபத்தியத்திற்கும் எமக்கும் உள்ளகடைசித் தொடர்பையும் துண்டறுக்கும் பணிக்குத் தலைமை தாங்கினார்என்றால், சரித்திரம் திரும்புகிறது என்பதோ, சரித்திரம் மாறுகிறது என்பதா என்றே தெரியவில்லை.

வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டோரைப்பற்றியும், அவர்களது கடந்தகால அரசியல் வாழ்க்கையையும், அவர்தம் முந்தையோர் வரலாறு பற்றியும் சற்றே நாம் நோக்கித்தான் ஆகவேண்டும்.

அப்பொழுதுதான் இந்நிகழ்ச்சியின் பாரம் பரியத்தை- அதன் முக்கியத்துவத்தை முழுமையாக உணரலாம்.

ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமோ என்னவோ, சுபநேரம்வரும் வரை ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் காத்திருக்க வேண்டியிருந்தது. காலை 11 மணிக்குச் சரியாகக் கூடியவர்கள் சுமார் 11-10 வரை- சுபநேரம்வரை- காத்திருந்தார்கள். அதன் பின்னர் பிரதமர் திருமதி பண்டார

தொடுக்கப்பட்ட பின்னர், புதியதொரு அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்குவதற்காக ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசியல்நிர்ணயசபை உறுப்பினர்களாகப் பணிபுரியவும் வழிவகுக்கும் பிரேரணையை பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா முன்மொழிந்து பேசினர்.

அவரைத்தொடர்ந்து டாக்டர் என், எம். பெரேரா வழிமொழிந்து பேசினர்.

இத்துடன் 'நவரங்ககலா' கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு, 3 மணியளவில்ஆட்சிமன்ற மண்டபத்தில் மீண்டும்கூடி, தொடர்ந்து பிரதமர் கொண்டுவந்த மேற்படி பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றது:

சிம்மாசனப் பிரசங்கவிவாதத்தின் போது செனட்டர் நடேசன், அரசியல் நிர்ணய சபையில் புத்தபெருமானின் சிலையொன்றும் வைக்கப்படவேண்டும் என்று யோசனை தெரிவித்திருந்தார் அல்லவா? அந்த யோசனையை ஆட்சியாளர் ஏற்றுக் கொண்டனர் என்பதைக் காட்டும் முகமாக அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் எல்லார் கண்களிலும் படும் முகமாக 'நவரங்ககலா'வில் போதிமரத்தினடியில் புனிதம் பெற்ற புத்தபெருமானின் திருவுருவச்சிலை வைக்கப்பட்டிருந்தது!

செனட்டர் நடேசன், புத்தர் சிலையை அரசியல் நிர்ணய சபையில் வைக்க வேண்டுமென்று யோசனை கூறியபோது, தெரிவித்த கருத்துப் பொதிந்த வாசகங்கள் ஒவ்வொருவர் நினைவிலும் நின்று நிலைக்க வேண்டியவை. அவர் சொன்னதாவது:-

''புத்தருடைய போதனைகளின் விளைவான நிலையான படிப்பினைகளை நினைவுபடுத்தவும்-புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்புத் திட்டம் பெறும் சோஷலிஸக் கொள்கைகள் ஜனநாயகக் கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமல்லாது, பௌத்தத்தின் உண்மையான கொள்கைகளையும் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்தவும் அரசியல் நிர்ணய சபையில் பிரதானமான இடத்தில் புத்தரின் திருவுருவச் சிலையொன்று வைக்கப்பட வேண்டும். பௌத்த நாடான இந்நாட்டுக்கான அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்க ஈடுபடும் போது, காலத்தால் மறையாது என்றும் நின்று நிலவும் புத்தரின் உன்னத போதனைகளை மறக்காதிருக்க இது உதவும்''

புத் திட்டத்தின் விதிகளின் படி, புதிய அரசியலமைப்புத் திட்டமொன்றை உருவாக்க எமக்கு அதிகாரம் இருக்கிறதா, இல்லையா என்பதைப்பற்றி மேலோட்டமாக ஆராந்து விட்டு, 'மக்களிடமிருந்து அதிகாரத்தை நேரடியாகப் பெற்று புதியதொரு அரசியலமைப்புத் திட்டம் அமைக்க நாம் கூடியுள்ளோம்'' என்று கூறிய ஜே. ஆர். 1815-ல் ஸ்ரீ விக்ரமராஜசிங்க ஆட்சியிலிருந்து இறக்கப்பட்டு மூன்றாம் ஜோர்ஜ் மன்னரிடம் நாடும், மக்களும் ஒப்படைக்கப்பட்டநிகழ்ச்சியையும் ''காரணத்தோடு'' நினைவுபடுத்தி பிரதமர் திருமதி பண்டாரநாயகாவின் ஆசனத்தை நோக்கி பின்வருமாறு கூறி, சபையில் பெருஞ்சிரிப்பை உண்டுபண்ணினார்.

''155 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் விளைவுகளிலிருந்து எம்மை முற்றாகத் துண்டித்துக் கொள்ளும் நிகழ்ச்சியில் பிரதம மந்திரி அவர்களே, நீங்களும் நானும் கலந்து கொள்வது மிகப் பொருத்தமானதென்றே கருதுகின்றேன்.

உங்கள் கணவரின் மூதாதைகளான முதலியார் டொன் சொலமன் டயஸ் பண்டாரநாயகா, உங்கள் மூதாதையரான ரத்வத்தை டிஸாவ, ஆகியோரும் என்னுடைய மூதாதையரான டொன் ஓட்ரியன்விஜயசிங்க ஜெயவர்தன ஆகியோரும் அன்று (1815) நடந்த சரித்திர முக்கியம் வாய்ந்த நிகழ்ச்சியில் சகாக்களாகப் பங்கு பற்றியிருக்கின்றனர்''

இதனை ஜே ஆர் சொல்லியபோது சபையில்பெருஞ்சிரிப்பு கிளம்பியது. தற்பொழுது திருமதி பண்டாரநாயக்கா சபையில் இருக்கவில்லை. ஜே. ஆரின் 'இந்தப் பொருள் பொதிந்த குறிப்பு' எழுப்பிய சிரிப்பலைகளின் மத்தியிலே திருமதி பண்டாரநாயக்காவும் தற்செயலாக சபையினுள் நுழைய, திரு ஜே ஆர். மீண்டும் அதனையே கூறி, இன்னுமொரு முறை சிரிப்பேற்படுத்தினார்.

1815ல் கண்டியை ஆண்ட கடைசி மன்னனைப் பதவியிலிருந்து இறக்கி, ஆங்கிலேயரிடம் ஆட்சியை ஒப்படைத்த நிகழ்ச்சியில், யார், யாருடைய மூதாதையர்கள், எந்தெந்தப் பக்கத்தின் சார்பில் பங்குபற்றினர்கள் என்பதைப் புரிந்து கொண்டால் சபையில் ஏற்பட்ட சிரிப்புக்கும் காரணம் விளங்கும்!

### தகாநாயக்கா

அடுத்து பேசிய டாக்டர் தகாநாயக்கா எல்லாரையும் வியப்பிலாழ்த்தும் விதமாக, கட்சி அரசியல் எல்லாம் ஒழிக்கப்பட்டு, வேறு முறையிலான ஆட்சியமைப்பு ஏற்பட வேண்டுமென்று 'தகா' வெகுவாக வற்புறுத்தினர்.

சோல்பரிஅரசியல் அமைப்புத் திட்டத்தின்கீழ் உள்ள 29ம் ஷரத்து, இலங்கையை என்றென்றும் சுதந்திரமில்லாத நாடாக வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே புகுத்தப்பட்டது என்று வாதிட்ட 'தகா' 29ம் ஷரத்தையும் தூக்கி எறிவதோடு, ஆங்கிலேயருடன் உள்ள எல்லாத் தொடர்புகளையும்-கொமன்வெல்த் தொடர்பு- ஆட்சி மன்றமுறைத் தொடர்பு- அறுக்தெறிய வேண்டும் என்று வெகுவாக வலியுறுத்தினர்.

டாக்டர் தகாநாயக்காவின் இன்றைய பேச்சு பலருக்கு வியப்பாக இருந்தது: சிலருக்குப் புதிராக இருந்தது. இதற்கு முக்கிய காரணம் 'தகா' வின் பேச்சின் பெரும்பகுதி ஜே. ஆரின் பேச்சுக்கு மாறாக இருந்தமையே!

### தமிழ்க்காங்கிரஸ் தியாகராஜா

வட்டுக்கோட்டை எம்.பி. தியாகராசா, புதிய அரசியல் நிர்ணய சபைக்குத் தமிழ்க் காங்கிரஸ் எல்லாவித ஒத்துழைப்பையும் நல்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்து, வேற்றுமையில் ஒற்றுமையையும், ஒற்றுமையில் வேற்றுமையையும் ஏற்றுக்கொண்டு, புதிய அரசியலமைப்புத் திட்டத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயம் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினர்.

'சட்ட ரீதியிலோ, அரசியலமைப்பு ரீதியிலோ இந்தப் பிரச்னையை நோக்கவில்லை; அரசியல் நீதியில் தான் நோக்கிடுகிறோம் 'என்று சொன்ன தமிழ்க் காங்கிரஸ் தியாகராசா, கல்வி, நிர்வாகம், நீதிபரிபாலனம் ஆகிய துறைகளில் சிங்களவர்களுக்கு சிங்களம் எப்படியோ அதே போல் தமிழர்களுக்குத் தமிழும் இருக்கவேண்டியதவசியம்' என்று வற்புறுத்தினர்.

— —

யாழ்பாணம் செட்டித்தெரு மெ. மி. த. கனிஷ்ட வித்தியாலய ஆசிரியர்கள் அனைவரும் நாட்டைக்காக்கும் நிதிக்கு ஒருநாள் சம்பளம் கொடுத்து உதவினர்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org